Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

SATURDAY, JANUARY 29, 2022

சனிக்கிழமை ஜனவரி 29, 2022 | ஒளி: 07 கதிர்: 218 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE

# உ/த பரீட்சையை ஒத்திவைக்குமாறு மனு

2021 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொதுநல ஆர்வலரான நாகாநந்த கொடித்துவக்கு இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அந்தப் பரீட்சையை எதிர்வரும் 20 வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறே மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தம்

# தடுத்து வைக்கும் காலம் குறைப்பு

**உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யலாம்**

**சட்டத்தரணி பார்க்கலாம்: உறவினர்கள் தொடர்புகொள்ளலாம்**

**சந்தேகநபரின் நிலையை ஆராய நீதவானுக்கும் அனுமதி**

பயங்கரவாத தடைச்சட்டத்தில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வு, பெப்ரவரி மாதம் இறுதியில் நடைபெறவுள்ளது. இந்நிலையில், இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

சர்வதேச நியமங்களுக்கு அமைவாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் தற்காலிக ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தத் திருத்தங்களின் அடிப்படையில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விதிகளின் கீழ் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்ய முடியும்.

தொடர்ச்சி P2

# பயங்கரவாத தடை சட்டத்தை முழுமையாக நீக்குவதே அவசியம்

**மனோ தெரிவிப்பு: குரலை நிறுத்திவிடக்கூடாது என்கிறார்**



பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும் என்று தெரிவித்துள்ள தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், முழுமையாக நீக்கப்படவேண்டும் என்ற குரலை நாம் நிறுத்திவிடக்கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடை சட்டம் மீள் திருத்தப்படும் வர்த்தமானி பிரகடனம் வெளியாகியுள்ள நிலையில், ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை விடுத்தே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# 75 அடி பள்ளத்தில் புரண்டு, புரண்டு சிற்றாறுக்குள் விழுந்தது சின்ன பஸ்

**ஒருவர் மரணம்: 16 பேருக்கு கடுங்காயம்**



■ எஸ்.கணேசன்

ஹட்டனில் உள்ள தனியார் நிறுவனமொன்றுக்கு பணியாளர்களை ஏற்றிக்கொண்டுவந்த சிறியரக பஸ்ஸொன்று, 75 அடி பள்ளத்தில் புரண்டு, சிற்றாறுக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது.

இதில், ஒருவர் மரணமடைந்துள்ளார். கடுங்காயமடைந்த 16 பேர், டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த ஹட்டன் பொலிஸார், தப்பிச் சென்ற சாரதியை தேடி வலைவிரித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா- சலங்கந்தை- ஹட்டன் பிரதான வீதியில், தரவளைக்கு அருகிலேயே இச்சம்பவம் நேற்றுக்காலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பஸ்ஸை சாரதிக்கு கட்டுப்படுத்த முடியாமல் போனதை அடுத்தே இந்த விபரீதம் ஏற்பட்டுள்ளது என்றும். சலங்கத்தை பக்கமாகக் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸொன்றுக்கு வழிவிடுவதற்கு முயன்றபோதே, இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டிய இலங்கை பெண் சென்னையில் கைது

■ சென்னை

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு நிதி திரட்டினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட பெண்ணொருவர், சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளார் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

போலி கடவுச்சீட்டு வழக்கில் சென்னையில் கைதான இலங்கை பெண், விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டியமை என்ஐஏ விசாரணையில் அம்பலமாகியுள்ளது என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# பிரதமர் தொடர்பான செய்தி உண்மையாகும்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்ற செய்தி பரவலாக அடிப்பட்டது. எனினும், அவ்வாறு எந்தவொரு சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படவில்லையென உயர்மட்டத்தில் கூறப்பட்டது.

இந்நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும், நீர்ப்பாசன அமைச்சருமான சமல் ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு சிறிய சத்திரசிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்பதை பகிரங்கமாகவே அறிவித்தார்.

தொடர்ச்சி P2

# பாவத்தை சுமக்காமல் எதிர்க்க முன்வாருங்கள்

**சம்பிக்க அழைப்பு; கொள்ளையால் 'இல்லை" என்கிறார்**

அபிவிருத்தி என்ற போர்வையில் 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் முன்னெடுக்கப்பட்ட பாரிய டொலர் கொள்ளையின் பிரதிபலனையே நாட்டு மக்கள் இன்று அனுபவித்து வருகின்றனர் எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க,

தொடர்ச்சி P2

# நாட்டை முடக்க முடியாது; மிகக் கவனமாக இருக்கவும்

கொரோனா தொற்று பரவுதல் மிகவேகமாக அதிகரித்துள்ளமையால். நாட்டை முடக்கிவிடுமாறு பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் தனிநபர்களிடமிருந்தும் அரசாங்கம் மற்றும் சுகாதார அமைச்சுக்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சி P2



# ஹிஜாஸின் பிணை மனு மீண்டும் நிராகரிப்பு

■ ரஸீன் ரஸ்மின்

சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் பிணை மனுவை புத்தளம் மேல்நீதிமன்றம் இரண்டாவது தடவையாகவும் நேற்று (28) நிராகரித்தது.

சமூகங்களுக்கு இடையே வெறுப்புணர்வைத் தூண்டிய குற்றச்சாட்டுகளின் கீழ் புத்தளம் மேல் நீதிமன்றில், ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு நேற்று (28) மீளவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

### சுற்றாடலில் வருடாந்தம்

# 600 மில்லியன் பிளாஸ்டிக் கரண்டிகள் சேர்கின்றன



இலங்கையில் வருடாந்தம் 600 மில்லியன் பிளாஸ்டிக் கரண்டிகள், சுற்றாடலில் சேர்வதாக சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# சபைக்குள் புகுந்து விளையாடுகிறது கொரோனா

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

தொடர்ச்சி P2

# பண்டைய நாகரிகத்தைப் போன்று விவசாயம் அழிக்கப்பட்டுள்ளது



கலிங்க மன்னன் பண்டைய நாகரிகத்தை அழித்தைப் போன்று இந்த அரசாங்கம் விவசாய நாகரிகத்தை அழித்துள்ளதென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கண்டி கிளர்ச்சியின் போது, வெள்ளையர்கள் காய்க்கும் மரத்தை கூட அழித்தனர். அதேபோல் கலிங்க மன்னரின் காலத்தில் நாட்டின் பண்டைய நாகரிகம் அழிக்கப்பட்டது. அதேபோல் இந்த அரசாங்கம் தற்போது விவசாய நாகரிகத்தை முற்றாக அழித்துள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

### உதவி ஆசிரியர் நியமனம் தொடர்பில்

# செந்தில் முன்னிலையில் கல்வியமைச்சர் உறுதி



உதவி ஆசிரியர்களுக்கான நியமனத்தை விரைவாக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தன விழா மேடையில் வைத்தே உறுதியளித்தார்.

தொடர்ச்சி P2

# குண்டு வெடித்ததில் 15 வயது சிறுவனுக்கு காயம்

அவிசாவளை, கொஸ்கம, சாலாவ பிரதேசத்தில் வீடொன்றின் முற்றத்தில் கிடந்த மோட்டார் குண்டொன்றின் பகுதியொன்று வெடித்துச் சிதறியதில், 15 வயதான மாணவன் கடுங்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

அவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

2016ஆம் ஆண்டு சாலாவ ஆயுத களஞ்சியசாலை வெடித்துச் சிதறிய குண்டுகளின், சிறிய துண்டொன்றே இவ்வாறு வெடித்துச் சிதறியுள்ளது.

அந்தக் குண்டு துண்டொன்றை, இரும்பினால் தட்டி நசுக்கிக்கொண்டிருந்த போதே, அத்துண்டு நேற்றுமுன்தினம் (27) வெடித்துச் சிதறியுள்ளது.

தொடர்ச்சி P2

# எண்ணெய் குதங்கள் வழக்கு: ஆட்சேபனைகளுக்கு அனுமதி



திருகோணமலை எண்ணெய் குதங்களின் அபிவிருத்தி தொடர்பாக இந்திய எண்ணெய் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை வலுவற்றதாக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு தொடர்பில் ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# தடுத்து வைக்கும் காலம் குறைப்பு

அத்துடன், தடுப்புக்காவல் அல்லது விளக்கமறியலில் தடுத்து வைத்திருக்கும் நபரை சட்டத்தரணி ஒருவர் பார்வையிட செல்லமுடியும் என்பதுடன், சந்தேகநபரின் உறவினர்களுடன் தொடர்புகொள்ள முடியும்.

இந்தத் திருத்தங்கள், தடுப்புக்காவல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒருவரைத் தடுத்து வைக்கும் காலத்தை 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களாகக் குறைக்கவும் வழிவகை செய்கின்றன.

அத்துடன், குறித்த திருத்தங்கள் ஊடாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரின் நிலை குறித்து ஆராய்வதற்கு நீதவானுக்கும் அனுமதி வழங்கப்படுகின்றது.

மேலும், சந்தேகநபரை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் ஆஜர்படுத்தி, அவர் சித்திரவதைக்கு உட்படுத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கும் இதன் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் தொடர்பான நடவடிக்கைகளை தாமதமின்றி நிறைவு செய்வதற்கு, நாளாந்தம் வழக்கு விசாரணைகளை நடத்துவதற்கும் திருத்தங்கள் வழிவகுக்கின்றன.

1979 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தில் 43 ஆண்டுகளுக்கு பின்னரே இவ்வாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது

## பயங்கரவாத தடை சட்டத்தை முழுமையாக நீக்குவதே அவசியம்

ஐ.நா மனித உரிமை ஆணையகத்தை, ஐரோப்பிய ஜி.எஸ்.பி சலுகையை நோக்கி, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் வேறு வழியில்லாமல் அறிவித்துள்ளார்.

என்னைப் பொறுத்தவரையில், திருத்தம் அல்ல, இச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். அவசர நிலைமைகளுக்கு சாதாரண சட்டங்களே போதும். அதி அவசரம் ஏற்படுமானால், சடுதியாக இந்த சட்டத்தை மீள உடன் கொண்டும் வரலாம். அரசியலமைப்பு திருத்தங்களை ஒரே நாளிலேயே கொண்டு வந்தவர்களுக்கு இது பெரிதல்ல.

ஆனால், இன்று சட்ட புத்தகங்களில் இருந்து இச்சட்டம் முழுமையாக அகற்றப்படுவது அவசியம். ஏனெனில் போர் முடிந்த பத்து ஆண்டுகள் ஆன பிறகும் அமுலிலிருக்கும் இச்சட்டம் கணிசமான துன்புறுத்தல்களை ஏற்கெனவே தந்து கொண்டுதான் இருக்கிறது. குறிப்பாக தமிழ் பேசும் மக்களை நோக்கி இது பாய்கிறது.

இதில் நடப்பு ராஜபக்ஷ அரசாங்கத்தை மட்டும் குறை கூற முடியாது. எந்தவோர் அரசாங்கமும் இச்சட்டத்தை முழுமையாக நீக்க முன்வரவில்லை. இந்த சட்டத்தால் பெரிதும் பாதிக்கப்படும் தமிழ், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல்வாதிகள் சிலரே இச்சட்டத்தை முழுமையாக நீக்கக்கூடாது என கொடி பிடிக்கிறார்கள் என்று ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 75 அடி பள்ளத்தில் புரண்டு, புரண்டு சிற்றாறுக்குள் விழுந்தது சின்ன பஸ்

இந்த சம்பவத்தில், பெர்ணான்டோ மரியசவேரி என்பவரே மரணமடைந்துள்ளார். அவருடைய சடலம், டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த ஹட்டன் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## பிரதமர் தொடர்பான செய்தி உண்மையாகும்

கம்பளையில் வியாழக்கிழமை (27) நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் சமல் ராஜபக்ஷ, மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

"இந்த வைபவத்தில் பிரதமர் கலந்துகொள்ளவிருந்தார். ஆனால், அவருக்கு சிறிய சத்திரசிகிச்சை ஒன்று செய்யப்பட்டுள்ளது. அதனால், அவரால் கலந்துகொள்ளமுடியவில்லை" என்றார்.

## உ/த பரீட்சையை ஒத்திவைக்குமாறு மனு

மனுவில், பிரதிவாதிகளாக கல்வி அமைச்சர், பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்றுக்கு மத்தியில் பாடத்திட்டங்கள் பூரணப்படுத்தாமல் பரீட்சைகளை நடத்துகின்றமை மாணவர்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் செயலென கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டுவதாக தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

2021ஆம்ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை, நாடளாவிய ரீதியில் பெப்ரவரி 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டிய இலங்கை பெண் சென்னையில் கைது

சென்னை விமான நிலையத்தில் வைத்து இலங்கையைச் சேர்ந்த மேரி பிரான்சிஸ்கோ கடந்த ஒக்டோபர் மாதம் கைது செய்யப்பட்டார். 2018இல் சென்னைக்கு வந்த மேரி, அண்ணாநகரில் தங்கி அதே முகவரியில் ரேஷன் அட்டை உள்ளிட்டவற்றை பெற்றுள்ளார் என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேரி பிரான்சிஸ்கா, சுற்றுலா விசா மூலம் 2019ம் ஆண்டு சென்னை வந்தார். பின்னர் கொரோனா கட்டுப்பாடுகளால் வெளிநாடுகளுக்கு செல்லும் விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இதனால் மேரி பிரான்சிஸ்கா சென்னையிலேயே தங்க வேண்டிய நிலை இருந்தது. இதற்கிடையே சென்னை விமான நிலையத்தின் ஊடாக, பெங்களூரு விமான நிலையத்திற்கு செல்ல விமான நிலையத்திற்கு 2021 இல் சென்றார்.

அவரது கடவுச்சீட்டை சுங்கத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அதில், மேரி பிரான்சிஸ்கா, இந்திய குடியுரிமை பெற்ற நபர் என்றும், அதற்கான இந்திய கடவுச்சீட்டை கொண்டு வந்ததும் தெரியவந்தது. இதனால் சந்தேகமடைந்த சுங்கத்துறை அதிகாரிகள் மேரி பிரான்சிஸ்காவை பிடித்து க்யூ பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

## பாவத்தை சுமக்காமல் எதிர்க்க முன்வாருங்கள்

இந்த பாவத்தை மென்மேலும் சுமக்காமல் அதற்கெதிராக முன்வாருங்கள் என மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

"இல்லை, இல்லை, இல்லை" என்பதற்கு கொள்ளையே பிரதான காரணமாகும். நல்லாட்சியின் ஊழல் ஒழிப்பு, குழுவால் அரசியல் பழிவாங்கல்கள் முன்னெடுக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் சம்பிக்க ரணவக்க நேற்று (28) வாக்குமூலமளித்தார்.

அதன்பின்னர், அங்கிருந்து வெளியேறும் போதே, ஊடகங்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எம்மை தண்டித்து, எமது ஜனநாயக உரிமைகளை பறிப்பதற்காக புதிய ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்த ஆணைக்குழுவின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் இங்கு அழைக்கப்பட வில்லை என்பதுதான் பெரிய நகைச்சுவையாகும். சட்டமா திணைக்களத்தின் நீதிமன்றத்துக்கு பொறுப்பானவர்கள் இங்கு அழைக்கப்படவில்லை. அன்று இடம்பெற்ற பாரிய டொலர் கொள்ளையின் விளைவையே நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். மின்சாரம் இல்லை, குழந்தைகளுக்கு பால்மா இல்லை. உரம் இல்லை, இவற்றை கொள்வனவு செய்வதற்கு டொலர் இல்லை. 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர், முன்னெடுக்கப்பட்ட தேசிய கொள்ளையால்தான், டொலர் இல்லாமல் போனது. பாரிய அபிவிருத்திகளின் பின்னால் அதிவேக நெடுஞ்சாலைகள், மின் உற்பத்தி நிலையங்கள், விமானநிலையங்கள் என்பவற்றின் போர்வையில் இடம்பெற்ற பாரிய டொலர் கொள்ளையின் பலனையே நாடு இன்று (28) அனுபவிக்கின்றது.

## நாட்டை முடக்க முடியாது; மிகக் கவனமாக இருக்கவும்

அவ்வாறு கோரிக்கை விடுக்கும் பிரிவுகளில், சுகாதார தொழிற்சங்கங்கள் சிலதும் அடங்குகின்றன.

இது தொடர்பில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவிக்கையில், நாட்டை முடக்குமாறு பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

எனினும், நாட்டை முடக்குவதற்கு இத்தருணத்தில் எந்தவிதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என்றார்.

நாட்டை முடக்குவது பிரச்சினைக்குத் தீர்வாகாது. நாடு திறந்திருக்கும் போதே, கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஹிஜாஸின் பிணை மனு மீண்டும் நிராகரிப்பு

பிரதிவாதி சார்பில் இரண்டாவது முறையாகவும் பிணை கோரப்பட்டது. அந்தக் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்து, வழக்கை பெப்ரவரி 18ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

இவ்வழக்கை விசாரிக்கவென விசேடமாக நியமிக்கப்பட்டுள்ள சிலாபம் மேல் நீதிமன்றின் நீதிபதி குமாரி அபேரத்ன, புத்தளம் மேல் நீதிமன்றுக்கு வருகை தந்திருந்தார். அவர் முன்னிலையிலேயே இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதிவாதியை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி நவம்பர் மாதம் 19 ஆம் திகதியன்றும் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. அந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், தமது நீதிமன்றுக்கு பிணையளிக்கும் அதிகாரம் இல்லையென, அன்றைய தினம் (நவம்பர் 19) நீதிபதி அறிவித்தார். அத்துடன், பிரதிவாதி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் சார்பில் நேற்றைய தினம், இரண்டாவது தடவையாக அவரது சட்டத்தரணிகள் பிணை கோரிக்கையை முன்வைத்தனர். இவ்வழக்கின் பிரதிவாதிக்கு, பிணையளிக்க இந்த நீதிமன்றுக்கு அதிகாரம் இல்லை என்பதால், குறித்த பிணை கோரிக்கையை மீண்டும் நிராகரித்து, வழக்கை பெப்ரவரி 18 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்குவதற்கான கோரிக்கைக்கு சட்டமா அதிபர் திணைக்களம் இணக்கம் தெரிவித்துள்ளதாக அரசதரப்பு சட்டத்தரணிகள் உயர்நீதிமன்றத்தில். கடந்தவாரம் சுட்டிக்காட்டியிருந்தனர். இந்நிலையிலேயே இரண்டாவது முறையாகவும் அவரது பிணை கோரிக்கை, நேற்றையதினம் (28) நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 600 மில்லியன் பிளாஸ்டிக் கரண்டிகள் சேர்கின்றன

இவ்வாறு சுற்றாடலுக்கு விடுவிக்கப்படும் பிளாஸ்டிக் பொருள்களை குறைப்பதற்கான தீர்வை ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்த அமைச்சர், இதற்காக பிரம்பு, பித்தளை, மண் மற்றும் பலகைக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சால் புதிய மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

எனவே, பிளாஸ்டிக் பொருள்களுக்கு பதிலாக உக்க கூடிய இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்துவது தொடர்பிலும் விசேட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகிறது என்றார்.

குறித்த இயற்கைப் பொருள்களை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்காக பிரம்பு, நாணல் உள்ளிட்ட தாவரங்களை மீண்டும் நடுதல் மற்றும் மட்பாண்டத்துறைக்கு தேவையான மண்ணை, யான்ஓயா பள்ளத்தாக்கிலிருந்து பெற்றுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், யானைகள் கிராமங்களுக்குள் ஊடுருவதை கட்டுப்படுத்துவதற்காக யானை வேலியாக பயன்படுத்தக் கூடிய தாவரங்களை வளர்த்தல் என்பன இந்த வேலைத்திட்டத்துக்குள் அடங்குவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## சபைக்குள் புகுந்து விளையாடுகிறது கொரோனா

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவுக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குண்டு வெடித்ததில் 15 சிறுவனுக்கு காயம்

சிறுவனின் கால்கள் இரண்டிலும் வயிற்றுப் பகுதியிலும் கடுமையான காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர், கொழும்பு வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்.

## பண்டைய நாகரிகத்தைப் போன்று விவசாயம் அழிக்கப்பட்டுள்ளது

தம்புள்ளையில் நேற்று (58) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், வெடிப்பு சம்பவங்களை நிறுத்துவதாக கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தின் கீழ், சமையல் எரிவாயு கூட வெடிக்கின்றன. அத்துடன் இறக்குமதி செய்யப்பட்டுள்ள திரவ உரம், பாரிய துர்நாற்றம் வீசுகிறது. இந்தத் துர்நாற்றம் இன்னும் அலரி மாளிகைக்கும் பாராளுமன்றத்துக்கும் தெரியவில்லை. எனவே, மக்களின் துன்பங்களை உணரும் தன்மை அரசாங்கத்திடம் இல்லை.

விவசாயின் கண்ணீர், வேதனை, விவசாயியை வீழ்த்தி, கஷ்டப்படுத்தி தமது நண்பர்களுக்கு பணம் தேடும் வழியை உருவாக்கியது மட்டுமே இந்த அரசாங்கம் செய்து வேலையே தவிர, இந்த வருடங்களில் மகிழ்ச்சிகரமான தகவல் ஒன்றை கூட கூறவில்லை என்றார்.

## எண்ணெய் குதங்கள் வழக்கு: ஆட்சேபனைகளுக்கு அனுமதி

வழக்கின் பிரதிவாதிகளான சட்டமா அதிபர், நிதியமைச்சர் உள்ளிட்டவர்களுக்கே, உயர் நீதிமன்றம் நேற்று (28) அனுமதியளித்துள்ளது.

இந்த ஆட்சேபனைகளை மார்ச் மாதம் 11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மனுக்களில் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கலாநிதி பி.பீ.ஜயசுந்தர, ஜனாதிபதி செயலாளராக தற்போது பதவி வகிக்கவில்லை. ஆகையால், பிரதிவாதிகளின் பெயர்ப்பட்டியலை திருத்துவதற்கு அனுமதி வழங்குமாறு மனுதாரர்கள் கோரிக்கை விடுத்தனர். அந்த கோரிக்கைக்கும் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

திருகோணமலை எண்ணெய் குதங்களின் அபிவிருத்தி தொடர்பாக ஒப்பந்தத்தை சவாலுக்கு உட்படுத்தி, எல்லே குணவங்ச தேரர், பெங்கமுவே நாலக்க தேரர், தேசிய பிக்குகள் முன்னணியின் செயலாளர் வக்கமுல்லே உதித்த தேரர் ஆகியோரினால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## செந்தில் முன்னிலையில் கல்வியமைச்சர் உறுதி

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபசெயலாளரும், பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் விடுத்த கோரிக்கைக்கே, கல்வியமைச்சர் இவ்வாறு உறுதியளித்தார்.

இறக்குவானை சென். ஜோன்ஸ் பாடசாலை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. அதற்கான ஆவணம் கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தன,பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரட்ன, பிரியாந்தினி சொய்ஷா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உதவி செயலாளர் ரூபன் பெருமாள் ஆகியோர் தலைமையில் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

கடந்தகாலத்தில் இந்தப் பாடசாலைக்கு 1 1/2ஏக்கர் காணியை செந்தில் தொண்டமான் பெற்றுக்கொடுத்தி ருந்ததுடன், 03 மாடி கட்டடம் ஒன்றையும் அமைப்பதற்கான நடவடிக்கையும் முன்னெடுத்துள்ளார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய செந்தில் தொண்டமான், அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலம் முதல் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் காலம் வரை இந்த பாடசாலையின் வளர்ச்சியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கு பாரிய பங்களிப்பு நினைவு கூர்ந்தார், எதிர்காலத்திலும் பாடசாலையின் வளர்ச்சியை முன்னெடுப்பதில் முன்னின்று செயல்படுமென உறுதியளித்தார். அமரர் ஆறுமுகன் தொண்டமான் மற்றும் அப்போதைய கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன ஆகியோர் 2014ஆம் ஆண்டு கூட்டு அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக 3,000க்கும் மேற்பட்ட உதவி ஆசிரியர் நியமன பத்திரங்களுக்கு அமைச்சரவை அனுமதி பெற்றிருந்தனர்.

பசளையின்மையால்

# வெற்று வயலில் ஒரு வெள்ளாமை

க. அகரன்



பொருளாதாரத்தின் மேம்பாடு என்பது, இந்த நாட்டின் பல்துறை வளர்ச்சிக்கு மாத்திரமின்றி பணத்தின் பெறுமதிக்கும் அச்சாணியாக அமைகின்றது.

எனினும் கொவிட்-19 பெருந்தொற்று மற்றும் இன்னேரன்ன காரணங்களால் பல்வேறு நாடுகள் பொருளாதார ரீதியில், அண்மைக்காலமாக பின்னோக்கி நகர்ந்தபோதிலும், அவர்கள் தொடர்ச்சியாக பின்னடைவு நிலைமையைத் தமது நாட்டில் தக்க வைக்கவில்லை.

மீண்டெழுதல் என்ற பொறிமுறை செயற்றிட்டத்தின் மூலமாகத் தமது நாட்டின் அடிப்படை பொருளாதார கூறுகளை கட்டியெழுப்ப முனைந்ததன் பயனாக, பல நாடுகள் பணவீக்கம், பற்றாக்குறைகள், என்பற்றில் இருந்து மீண்டெழுந்து வருகின்றன.

எனினும், இலங்கையில் அதற்கு மாறுபட்ட நிலைமை காணப்படுவதால், பல்துறை சார்ந்தவர்களும் இன்று பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதுடன், பாரிய உணவு பற்றாக்குறை அல்லது உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்புக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இலங்கையை பொறுத்தவரையில், கொரோனா தாக்கத்தால் ஏற்பட்ட சுற்றுலாத்துறை வீழ்ச்சி, டொலர் மீதான பற்றாக்குறையை ஏற்படுத்திய நிலையில், உள்ளூர் உற்பத்தியை பெருக்க வேண்டிய நிலையில், மாறாக உணவு உற்பத்தியில் புரட்சியை மேற்கொள்வதாகத் தெரிவித்து, அறிமுகப்படுத்தப்பட்ட பசுமைப்புரட்சி என்கின்ற சேதன பசளை மூலமான விவசாய செய்கை, விவசாயிகளை மாத்திரமல்லாமல் நுகர்வோரையும் பாதித்துள்ளமை கண்கூடு.

இந்நிலையில், விவசாயத்துக்குத் தேவையான இரசாயன உரம் கிடைக்கப்பெறாத நிலையில், சேதனப் பசளையையும் விவசாயிகளிடம் கைவசம் இல்லாத சூழலில் விவசாய செய்கையில் நம்பிக்கை இழந்த பல விவசாயிகள் நெற்செய்கை உட்பட மரக்கறி செய்கையிலும் ஆர்வம் செலுத்தாத நிலை காணப்பட்டது.

அரசின் புதிய கொள்கைகள் சில சுயதொழில் முயற்சியாளர்களுக்கு வாய்ப்பாக அமையும் என எண்ணி, இளைஞர்கள் பலர் சேதன பசளை உற்பத்தியில் தமது கவனத்தைச் செலுத்த முற்பட்டபோதிலும் அதற்கான மூலப்பொருட்களை பெறுவது கடினமான நிலைமையை எதிர்கொண்டனர்.

ஒரு சிலர் குறித்த திட்டம் நீண்டு செல்லும் என்ற காரணத்தால் சேதன பசளைக்கான மூலப்பொருட்களை பணம் கொடுத்துப் பெற்று உற்பத்தியை வியாபார நோக்கத்துடனும் மேற்கொண்டனர்.

**அரசாங்கத்திடம் திடமான கொள்ளையின்மையால் பாதிக்கப்பட்ட தரப்பினராக விவசாயிகளுடன் சேதன பசளை உற்பத்தியாளர்களும் சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டனர்**



ஆனாலும், அரசாங்கம் அவர்களைக் கண்டு கொள்வதைவிட, இராணுவத்தினூடாகப் பசளை உற்பத்தி செய்வதிலேயே கரிசனை கொண்டது. இதனால், குறித்த காலப்பகுதிக்குள் சேதன பசளை உற்பத்திக்கான இயந்திர வசதிகள் உட்பட, தொழில்நுட்ப பகிர்வுகள் போதுமானதாக உற்பத்தியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் கிடைக்காமை மற்றும், பயிர்ச்செய்கை காலத்தினுள் சேதன பசளையை உற்பத்தி செய்ய முடியாமை போன்றவற்றால், விவசாயிகள் மாத்திரமின்றி சோதன பசளை உற்பத்தியில் ஈடுபட்ட சுயதொழில் முனைவோரும் பாரிய நெருக்கடியை சந்தித்தனர்.

இவ்வாறான நிலையிலேயே விவசாயிகளின் தொடர்ச்சியான போராட்டத்துக்காகத் தமது கொள்கையை விட்டுக்கொடுத்த அரசாங்கம், தனியார் துறையினூடாக இரசாயன பசளையை இறக்குமதி செய்ய அனுமதியளித்துள்ளது. திடமான கொள்ளையின்மையால் பாதிக்கப்பட்ட தரப்பினராக விவசாயிகளுடன் சேதன பசளை உற்பத்தியாளர்களும் சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டனர்.

இரசாயன உரம் வரும் என்பதால் சேதன பசளையை பெற விவசாயிகள் பின்னடித்தனர். இதனால் சேதன பசளை உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியை சந்தைப்படுத்த முடியாத துர்ப்பாக்கியத்துக்குள் சிக்கிய நிலையில், நெற் செய்கையின் அறுவடையிலும் பாரிய வீழ்ச்சியை விவசாயிகள் சந்திக்கத் தொடங்கினர்.

ஒரு ஏக்கருக்கு 35- 40 மூடைகள் என்ற அறுவடை வீதம், தற்போது ஏக்கருக்கு 5 தொடக்கம் 10 வரையிலேயே காணப்படுகின்றது. குறிப்பாக, ஒரு ஏக்கர் நெற் செய்கைக்காக செலவு செய்த பணத்தின் அரைப்பங்கினைக்கூட குறித்த நெல்லை விற்பதால் பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு விவசாயிகள் முகம்கொடுத்து வரும் நிலையிலேயே, சீனா பல மெற்றிக்தொன் அரிசியை இலவசமாக வழங்கியுள்ளது. 'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த' கதையாகி உள்ளது விவசாயிகளின் தற்போதைய சூழல்.

இச்சூழலிலேயே சேதன பசளை உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாமலும், தாம் முதலிட்ட பணத்தைப் பெறமுடியாமலும் அங்கலாய்க்கும் நிலையில், அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சேதன பசளையில் எவ்வித பயனும் இல்லை என்ற நிலைக்குள் தள்ளப்பட்ட விவசாயிகள், சேதன பசளை

**இரசாயன உரம் வரும் என்பதால் சேதன பசளையை பெற விவசாயிகள் பின்னடித்தனர். இதனால் சேதன பசளை உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியை சந்தைப்படுத்த முடியாத துர்ப்பாக்கியத்துக்குள் சிக்கினார்கள்**

ஊடான விவசாய உற்பத்தி என்பது, சாத்தியமற்றது என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

எனினும், அரசாங்கத்தின் தொடர்ச்சியான பசுமை விவசாய செய்கை என்பது, கேள்விக்குறியாகியுள்ள நிலையில் தனியார் துறையால் இரசாயன உரம் இறக்குமதி செய்யப்பட்டால், அதன் விலைகள் உச்சத்தைத் தொடும் என்பதில் மாற்றமில்லை.

இலங்கையை பொறுத்தவரையில், எந்த பொருளுக்கும் கட்டுப்பாட்டு விலை இல்லாத போக்கு காணப்பட்டு வரும் நிலையில், தனியார் துறையால் மாத்திரம் இரசாயன உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு, அரசாங்கத்தின் கொள்கைக்கு மாறான விவசாய செய்கைகளுக்கு பயன்படுத்தப்படுமாயின், அதற்கான விலை தொடர்பில் அரசாங்கம் எவ்வித கரிசனையும் கொள்ளாது என்பதே யதார்த்தம்.

இந்நிலையில், நெல்லின் விலை அதிகரிக்கின்ற நிலைமை ஏற்படும். இவ்வாறான சூழல், நுகர்வோர் மத்தியில் தாக்கம் செலுத்தும் நிலையில் மக்கள் செவ்வதறியாது உணவுத் தட்டுப்பாட்டுக்கு அல்லது கொள்வனவு செய்ய முடியாத நிலைக்கு உள்ளாவார்கள்.

ஏனெனில் தற்போது வேலை வாய்ப்பின்மை என்ற விடயமும் மக்கள் மத்தியில் அதிகரித்துச் செல்லுகின்றது. 2020 ஆம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கையின் பிரகாரம், இலங்கையர்களுக்கு 5 சதவீத வேலை வாய்ப்பின்மை பிரச்சினை அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அது, தற்போது மேலும் அதிகரித்துள்ள நிலையில், தற்போதைய அரசின் திட்டமில்லாத போக்கில், சுயதொழில் முயற்சிகளும் கைகூடுமா என்ற சந்தேகம் சுயதொழில் முயற்சியாளர்கள் மத்தியில் அதிகரிக்கின்றது.

எனவே, இலங்கை மக்களின் சுய பொருளாதார வளர்ச்சியின் மந்த நிலை, இலங்கையின் உணவு உற்பத்தியில் காணப்படும் தன்னிறைவற்ற தன்மை என்பன, இலங்கையர்களின் எதிர்கால வாழ்வியல் முறைகள் தொடர்பில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.





கண்ணிவெடிகளை அகற்றுவதுடன் சமூகநலப் பணிகளையும் முன்னெடுக்கும் 'ஸார்ப்'

# சாமர்த்தியம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்





உள்நாட்டு யுத்தம் நிறைவு பெற்று பத்தாண்டுகள் கடந்துள்ள போதும், யுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்ட கண்ணி வெடிகளாலும் வெடிக்காத நிலையில் மிக ஆபத்தான நிலையில் காணப்படும் வெடிபொருட்களாலும் பாரிய அழிவுகள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

குறிப்பாக, இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றும் நடவடிக்கைகளுக்கு இவ்வாறான கண்ணிவெடிகளும் வெடிபொருட்களும் பாரிய சவாலாக விளங்குகின்றன.

இலங்கையில் மட்டுமல்லாது, உலக நாடுகளிலும் நவீன தொழில் நுட்ப வசதிகள் கொண்ட நாடுகளிலும் இது ஒரு சவாலாகவே உள்ளன. யுத்தம் காரணமாக, வெடிபொருட்களால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு பகுதியாக, முகமாலைப் பகுதி காணப்படுகின்றது.

யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்புகளும் பரஸ்பரம் மோதிக்கொண்ட ஒரு பகுதியாகவும் தினமும் பல உயிர்களைக் காவுகொண்டும் பலரை அங்கவீனர்களாக்கிய ஓர் பகுதியாகவும் கிளாலி முதல் முகமாலை, நாகர்கோவில் வரையான முன்னரங்க நிலை காணப்பட்டதுடன், அங்குலம் அங்குலமாக வெடிபொருட்கள் விதைக்கப்பட்டும் எறிகணைகள், துப்பாக்கி ரவைகள் என்பவற்றால் சல்லடை போடப்பட்டு எண்ணற்ற உயிர்கள் பறிக்கப்பட்ட ஓர் இடமாகவும் முகமாலையும் அதனை அண்டிய பகுதிகளும் அப்போது இருந்துள்ளன.

இங்கிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள், 25 வருடங்களின் பின்னர் மீளவும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறும் வகையில், முகமாலை பகுதியில்

ஏனைய பகுதிகளிலும் வெடிபொருட்களை அகற்றும் பணிகள், கண்ணிவெடிகளை அகற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் ஒன்றான 'ஸார்ப்' நிறுவனமானது, முல்லைத்தீவு மாவட்டத்தின் அம்பகாமம், தச்சடம்பன் போன்ற பகுதிகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் முகமாலை, ஆனையிறவு ஆகிய பகுதிகளிலும் தொடர்ந்து கண்ணிவெடி அகற்றும் பணிகளை முன்னெடுத்து வருகின்றது. இந்த நிறுவனமானது, உள்ளூர் பணியாளர்களை நன்கு பயிற்றுவித்து, அவர்களுக்கான தகுந்த பயிற்சிகளை வழங்கி, இந்தப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

அதனைவிட, 'ஸார்ப்' நிறுவனமானது சமூகநலப் பணிகளையும் முன்னெடுத்து வருகிறது. குறிப்பாக, பாடசாலை மட்டங்களில், பொதுமக்கள் மத்தியில் வெடிபொருட்கள் பற்றிய விழிப்புணர்வு செயற்பாடுகள், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்குதல், அதற்கும் மேலாக குருதிக்கொடைகளை கூட மனிதாபிமான அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு பல்வேறுபட்ட மனிதாபிமான பணிகளை மேற்கொண்டு வருகின்ற இந்த நிறுவனத்தின் செயற்பாடுகள், எல்லோராலும் பாராட்டத்தக்க ஒன்றாகவும் அதேநேரம் பணியாளர்களாக முன்னாள் போராளிகள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள், தொழில் வாய்ப்புகள் இன்றி இருப்போர் எனப் பலதரப்பட்டவர்களையும் உள்வாங்கி, அவர்களுக்கு சிறந்த தொழில் வாய்ப்பையும் வழங்கக்கூடிய விதத்திலே, மேற்படி பணிகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணிகளை, 'ஸார்ப்' நிறுவனமானது ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் முன்னெடுத்து வருகின்றது. இந்த அரச சார்பற்ற நிறுவனமானது, 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2022 ஜனவரி மாதம் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம், தச்சடம்பன் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை, ஆனையிறவு பிரதேசத்தில் பதினெட்டு இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து தொளாயிரத்து எண்பத்தேழு சதுரமீற்றர் பரப்பளவில் (1874,987) இருந்து முப்பத்திரெண்டாயிரத்து இருநூற்று எண்பத்திரெண்டு (32,282) சதுரமீற்றர் பரப்பளவில், அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார். அத்தோடு கிளிநொச்சி பிரதேச வைத்தியசாலையில் ஜனவரி மாதம் 13ஆம் திகதி இரத்ததானமும் வழங்கியுள்ளது.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யுத்த காலத்தில் வடக்கின் 640 கிராமங்களில், சுமார் 105 மில்லியன் வரையான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக, 2010ஆம் ஆண்டு யுனிசெப் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


விலைமனு கோரல் விளம்பரம்

கசகாவத்த மயானத்தை மேம்படுத்துவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. கம்பஹா மாநகர சபை

1. கம்பஹா மாநகர சபைக்கு சொந்தமான கசகாவத்த மயானத்தை மேம்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் முன் அனுபவமுல்ல நிறுவனத்திடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன

2. இந்த விலைமனுக்கள் 2022.02.14 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பாக நகர ஆணையாளர் அலுவலகத்திலுள்ள டெண்டர் பெட்டியில் இடவும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும் அத்துடன் விலைமனு விண்ணப்பங்கள் 2022.01.31 ஆம் திகதி முதல் மீள செலுத்தப்படாத விலைமனு விண்ணப்ப கட்டணம் ரூ.1500.00 ஐ செலுத்தி கம்பஹா மாநகர சபையின் நகரசபை இஞ்சினியர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

3. விலைமனு விண்ணப்பங்களை சரிபார்த்து கொள்வதற்கும் மற்றும் விடயத்திற்கான இடத்தை பார்வையிடுவதற்கும் 2022.01.31 ஆம் திகதி முதல் அலுவலக நேரத்தில் செய்துக்கொள்ளலாம் அத்துடன் இவ் விடயத்திற்கான மேலதிக விபரங்களை நகரசபை இஞ்சினியர் கம்பஹா மாநகர சபை மூலம் பெற்றுக்கொள்ளலாம். (033-4942302)

4. விலைமனுக்கள் முன் வைக்கும் நிறுவனங்கள் C-5 அல்லது அதற்கு மேலா தரத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

நகர ஆணையாளர்
மாநகர சபை
கம்பஹா
2022.01.27

### மட்டக்களப்பின் தொன்மம் போற்றும் ஆயிரம் விழுது ஆலமரம்:

# குன்றுகளைப் பெயர்ப்பதால் கல்வெட்டுகள் அழிக்கப்படுகின்றன

குந்தவி சிவபாலன்
4ஆம் வருடம், ஊடகக் கற்கைகள்துறை, யாழ். பல்கலைக்கழகம்





'ஈழக்கிழக்கின் எழு ஞாயிறாக பாலோடு தேன்சொரியப் பாடுமீன் பண்ணிசைக்க நீள்வாவி தாலாட்டும் நிலமடந்தை எனப் போற்றி' என்று புகழப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தில், எழுவான்கரை, படுவான்கரை என்ற பூர்வீக நிலவமைப்புகள் காணப்படுகின்றன.

இலங்கை முழுவதும் பல்வேறு இடங்களில் புராதன தொல்பொருட் சான்றுகள் கிடைக்கப்பெற்றுக் கொண்டிருக்கின்ற வேளையில், கிழக்கிலங்கையிலும் பல இடங்களில் புராதன குடியிருப்புகள் இருந்ததற்கான சான்றாதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் மட்டக்களப்பை அண்டிய பகுதிகளில், நாகர் வாழ்ந்ததற்கான பண்பாட்டுச் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில், வெல்லாவெளி கிராமத்தின் விவேகானந்தபுரம் பகுதியில் பல வரலாற்று தொன்ம அம்சங்கள் காணப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள போரதீவு பற்றிலுள்ள ஊர்களிலொன்று வெல்லாவெளி. முற்காலங்களில் அது, நாதனை வன்னியாரின் ஆட்சி வலயத்தில் அடங்கியிருந்தது. அங்கே ஆயிரம் விழுது ஆலமரம் என்பதுவும் அதன் எதிரே அடவியின் ஓரமாக அமைந்துள்ள பெரும்பாறை ஒன்றில் தொன்மையைப் பறை சாற்றும் பிராமிச் சாசனங்களும் உள்ளன.

ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் விழுதுகள் ஓடி, கிளைபரப்பி நிற்கும் இந்த ஆலமரம், பல நூறு ஆண்டுகள் பழைமை மிக்கதென கூறப்படுகின்றது. தொடர்ச்சியாக விழுதுகள் நிலத்தில் படிந்து அவை விருத்திபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு சுமார் 1,000 கும் மேற்பட்ட விழுதுகள் இங்கே காணப்படுகின்றன. இதனால் இதனை 'ஆயிரம் கால் ஆலமரம்', 'ஆயிரம் விழுது ஆலமரம்' எனப் அழைக்கின்றனர்.

இந்த ஆயிரம்கால் ஆலமரம் குறித்து, பலர் பல கருத்துகளை வெளியிட்டுள்ளனர். இதன் தகவல்களை ஆவணபூர்வமாக தகைசார் பேராசிரியர் சி. பத்மநாதன், இலங்கை தமிழ்ச் சாசனங்கள் பகுதி 1, பகுதி 2 போன்ற நூல்கள் வழியாக வெளியிட்டுள்ளார். மேலும், இதற்கு வலுச்சேர்க்கும் வகையில், 'ஆயிரம் கால் ஆலமரம்' குறித்தும் அதன் அருகிலுள்ள புராதன எச்சங்கள் குறித்தும் பேராசிரியருடனான நேர்காணல் இங்கு பிரசுரமாகிறது.

**கேள்வி:** வெல்லாவெளியில் தமிழ்க் கல்வெட்டுகளின் பின்னணி பற்றிக் கூற முடியுமா?

**பதில்:** இலங்கையில் முதன் முதலாக 2009ஆம் ஆண்டு வெல்லாவெளி, பிள்ளபிடிச்சான் என்கின்ற 60 அடி உயரமான மலையில், தமிழ்ப் பிராமிக் கல்வெட்டு அடையாளம் காணப்பட்டது. இது, சமண துறவிகள் பள்ளியைப் பற்றியதாகும். அதனை அமைத்துக் கொடுத்தது, ஒரு வணிககணத்தின் தலைவன் போன்ற விவரங்கள் அதிலே காணப்படுகின்றன. இதைத் தொடர்ந்து, தமிழ்க் கல்வெட்டுகள் பற்றிய ஆர்வம், கிழக்கிலங்கையில் ஏற்பட்டது. பின்னர் பல தமிழ்க் கல்வெட்டுகளும் புராதன குடியிருப்புகளும் இருந்தமைக்கான தொல்பொருள் சான்றுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இதனை அண்டிய பகுதியிலேயே வெல்லாவெளியில் ஆயிரம் கால் ஆலமரமும் காணப்படுகின்றது.

**கேள்வி:** பிரசித்தமாக பேசப்படும் வெல்லாவெளிக் கல்வெட்டுப் பற்றிக் குறிப்பிட முடியுமா?

**பதில்:** வெல்லாவெளியில், ஆயிரம்கால் ஆலமரத்துக்கு எதிரில் ஒரு மலைப்பாங்கான சரிவில, காட்டுப்பகுதியில் ஒரு குகைக்குள் பெரும் பாறைகள் சுற்றிலும் காணப்படுகின்ற இடத்தில், ஒரு பாறையில் தமிழும் பிராகிருதமும் கலந்த வாசகமொன்று காணப்படுகின்றது.




தகைசார் பேராசிரியர் சி. பத்மநாதன்

அது ஒரு கலப்பு மொழிக் கல்வெட்டாகும். அதில் முதலாவது சொல் தமிழ்ச் சொல். 'பெறுமகன்' என்று எழுதப்பட்டிருக்கின்றது. 'பெருமகன்' என்பதனை அவர்கள் 'பெறுமகன்' என எழுதியுள்ளார்கள். 'பருமக' எனவும் 'பெருமகன்' எனவும் பிராகிருத மொழியில் 248 இடங்களில் வருகின்றது. இது தமிழ் வடிவத்தினுடைய பிராகிருத மயமாகிய வடிவம் என்பது வெல்லாவெளிக் கல்வெட்டில் வருகின்ற 'பெருமகன்' என்பதன் மூலம் உறுதியாகின்றது. இந்தக் கல்வெட்டு காணப்படுகின்ற மற்றொரு பக்கத்தில் ஐந்து பிராமிய எழுத்துகள் காணப்படுகின்றன.

இந்தக் கல்வெட்டுகள், இன்றுவரை சரிவர பாதுகாக்கப்படவில்லை. நான் ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு முன்னர், தொல்பொருள் திணைக்களத்தாருக்கு இது குறித்து ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதற்கும் பதில் கிடைக்கவில்லை; எதுவும் நடைபெறவில்லை. அதுமாத்திரமன்றி இப்போது காணப்படுகின்ற பேரபாயம் என்னவெனில், விஞ்ஞான ரீதியாக பெரும் பாறைகள், மலைகள் என்பவற்றை கணப்பொழுதில் உடைத்தெறியக்கூடிய பெரும் கருவிகள் உள்ளன. அரசாங்கம், தனியார் நிறுவனங்களுக்கு கட்டடங்களை அமைக்க, கற்களை வழங்குபவர்கள் எல்லா இடங்களிலும் இடித்து வருகின்றார்கள். கிழக்கிலங்கையிலே தான் இந்த நாசகார வேலைகள் மிகத் துரிதமாக இடம்பெறுகின்றன. இதுவரை தொல்லியல் திணைக்களம் எதுவும் செய்யவில்லை. பலருக்கு இவ்வாறான தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் இருக்கின்றன எனத் தெரியாது. அவ்வாறு தெரிந்தவர்களும் சொல்லப் பயப்படுகிறார்கள்.





இவ்வாறாக, வெல்லாவெளிப் பகுதியில் காணப்படுகின்ற கல்வெட்டுகள் சார்ந்த உண்மைத் தகவல்களை தகைசார் பேராசிரியர் சி. பத்மநாதன் பகர்ந்து கொண்டார். அதேவேளை இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இதனை அனைவரும் பாதுகாக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

பலருக்கும் தெரியாத, மரபுரிமை பேணுகின்ற ஒரு தளமாக வெல்லாவெளியில் அமைந்துள்ள ஆயிரம் விழுது ஆலமரம் சார்ந்த விளக்கங்கத்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின் தலைவரும் ஆயிரம் கால் மண்டபத் தலைவருமான சிவகுரு கருணேஸ்வரன் பின்வருமாறு கூறுகின்றார்.

இந்தக் கோவில் பல நூறு வருடங்களுக்குமேல் பழைமை வாய்ந்ததாகும். புராதன காலத்தில் கொக்கட்டிச்சோலையில் அரசனாக இருந்த நாகராசா என்பவரே, இந்தக் கோவிலையும் நிர்வகித்து வந்ததாக கூறப்படுகின்றது. அவர் ஆட்சி செய்த காலம் தொட்டு, வெல்லாவெளி விவேகானந்தபுரத்து மக்கள் தான் அதனைப் பராமரித்து வருகின்றனர்.

இந்த ஆலையடிக்கு மறுபக்கம், கல்வெட்டுக்கு பக்கமாக தான் 'கிடாரம் போட்ட இடம்' என்கின்ற மலை உள்ளது. அங்குதான் புராதன குடியிருப்புகள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கின்றன. இங்கு பல அகழ்வாராய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றின் மூலமாக பல புராதன எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆயிரம் விழுது ஆலமரத்தில், 1,000 விழுதுகள் இருப்பதாகக் கூறப்பட்டாலும் தற்போது 2,000 மேற்பட்ட விழுதுகள் காணப்படுகின்றன. இந்த ஆலமரத்தினை பார்த்த மாத்திரத்திலேயே அனைவராலும் அதன் பழைமைத் தன்மைகளை ஊகித்துக்கொள்ள முடியும். அடர்ந்து, விரிந்து, விழுதுகளைப் பரப்பி, நிலம் முழுவதுமாக வேரோடிக் காணப்படுகின்றது. இதனை மையமாகக் கொண்டு வரலாற்று ரீதியான கதைகள் கூறப்பட்டு வருகின்றன.

இந்த மரத்தின் கீழ், பழைமை போற்றும் வண்ணம் தொன்று தொட்டு நாக மற்றும் வைரவ வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. புராதன காலத்தில் கூட, அந்த வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன என்பதனை கற்களாலான விக்கிரகங்கள், அமைப்பு முறைகளை அவதானித்தால் விளங்கிக் கொள்ளலாம். வெள்ளிக்கிழமைகளில் அதிகளவான பக்தர்கள் இங்கு வந்து பூஜை வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர். ஒவ்வொரு பூரணைக்கும் விசேட பூசைகளும் ஆண்டுக்கு ஒருமுறை சடங்கும் இடம்பெறும்.

உண்மையில், இவ்வாறானதொரு தொன்மம் வாய்ந்த ஆலமரம் இருப்பது பெரும்பாலானோருக்குத் தெரியாது. இதன் சிறப்புக்கு ஏற்ற வகையில் இது பராமரிக்கப்படவில்லை. மேலும் இது ஒரு காட்டுப்பாங்கான பகுதியில் இருப்பதனால் மக்களுக்கு இது குறித்த சரியான விளக்கமின்மை காணப்படுகின்றது.

இங்குள்ள பழைமையான கோவிலை புதிதாக நிர்மாணிக்கவும் இன்னும் இதன் விருட்சங்களுக்கு மண் ஏற்றிப்போட்டு அதனை பராமரிக்க வேண்டுமென எண்ணுகின்றோம். மக்கள் பெரும்பாலும் தாங்களாகவே இந்த வேலைகளைப் பூரணப்படுத்த முன்வந்திருக்கின்றார்கள். இதற்குப் பொறுப்பானவர்களும் அரசாங்கமும் இதனைக் கவனத்தில் எடுத்து, பராமரிக்க வேண்டிய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.



# கட்டைபறிச்சானின் தொன்மையும் இறால் பாலமும்



அ. அச்சுதன்





திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கட்டைபறிச்சான் கிராமம், கொட்டியாபுரத்தின் மிகத்தொன்மையான வரலாற்றுக் களமாகும். ஊரின் எல்லைச் சுவர்களாயுள்ள மலைத்தொடர்களில் உள்ள கற்குகைகளில் பொறிக்கப்பட்டிருக்கும் தமிழ் பிராமி எழுத்துகள், மலைத்தொடர்களுக்கு கர்ணபரம்பரையாக வழங்கப்படும் பெயர்கள், கிராமங்களுக்கு இட்டு வழங்கப்பட்டுவரும் காரணப்பெயர்கள், மூதாதையரின் குடியிருப்புகளை மெய்ப்பிக்கும் கேணிகள், திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றுடன் தொடர்புபட்ட சம்பவங்கள் என்பன கால வரையறை தாண்டிய வரலாற்றுத் தடயங்களாகும்.

கட்டைபறிச்சானின் மேற்கு கரையிலுள்ள 'தில்லங்கேணி' இறங்குதுறை தொடக்கம் 1,000 மீற்றர்கள் தாண்டி, சின்ன மட்டக்களப்பின் 'குழைச்சிக் கல்' வரையிலான இடமே, பெருங்கோவில் இருந்தற்கான சூழல் காணப்படுகின்றது.

ஆய்வாளர்களின் தேடல் கள வலயத்துக்குள் கட்டைபறிச்சான் உட்படுத்தப்படுமானால், திருகோணமலை மாவட்டத்தின் தமிழரின்





நிலைக்களத் தகவல்கள் ஏராளம் அகப்படும்.

200 ஆண்டுகளுக்கு முன்னர், கட்டைபறிச்சானில் மீகாமன் குடியினரால் வழிபடப்பட்டுவந்த அரசடிப் பிள்ளையார் கோவில், 2006 இல் ஏற்பட்ட யுத்தம் இடம் பெயர்வில் அழிவடைந்த நிலையில் தனவந்தர்கள், பொதுமக்கள், அரசதிணைக்களங்களின் ஒத்துழைப்புடன் பிரமாண்டமான முறையில் கோவில் புனரமைக்கப்பட்டு 25-09-2015 இல் குடமுழுக்கும் நடைபெற்றது.

இயற்கை எழில் மிகு கட்டைபறிச்சானின் நிலையான வளங்கொழிக்கும் பௌதிக உறுப்பு கட்டைபறிச்சான் ஆறுதான். வில்வித்தை ஆற்றிலிருந்து பிரிகின்ற ஒரு கிளை, இவ்வாற்றின் மேலாக உள்ள சின்னப்பாலமே மட்டக்களப்பு பழைய தெருவுடன் கட்டைபறிச்சானை இணைக்கின்றது. 1976ஆம் ஆண்டு பெரிய பாலம் அமைக்கப்படும் வரை இதுதான் கட்டைபறிச்சான் பாலம்.

அம்மன்நகர், கயவந்தான், பள்ளிக்குடியிருப்பு, பள்ளவெளி, சந்தணவெட்டு, ஒட்டுவட்டவன், கணேசபுரம் ஆகிய கிராமங்களுக்கான உறவுப்பாலமே இது. 1952 இன் முன்னர் பாய்ச்சல் துறையாக இருந்து, பின்னர் மரத்தினாலான பாலம் அமைக்கப்பட்டு 1970 காலப்பகுதியில் கொங்கிறீற் குழாய்கள் மூலம் கற்பாலம் அமைக்கப்பட்டு, இரண்டு முறை திருத்தம் செய்யப்பட்டும், இப்போது உடைந்த நிலையிலேயே உள்ளது.

இப்பாலத்தை நம்பி பல மீனவக் குடும்பங்கள் வாழ்கின்றன. வருடம் முழுவதும் இங்கு இறால் மீன், நண்டு என்பன பிடிக்கப்படுகின்றன. இரவு வேளையில் விளக்குகள் வைத்து 50 க்கும் மேற்பட்டோர் இறால் வீசுவது கண்கொள்ளாக் காட்சியாகும். இதனால் இறால்ப் பாலம் எனவும் இப்பாலம் சிறப்பிக்கப்படுகின்றது.

கட்டைபறிச்சான், இறால்ப் பாலத்தை அண்டிய பகுதிகளில் கண்டல் தாவரங்கள் அதிகம் காணப்படுகின்றன. இவை கிட்டத்தட்ட பல ஏக்கர் வரையான பகுதிகளில் பரவிக்காணப்படுகின்றன. இப்பகுதியில் காணப்படும் கண்டல் தாவரங்கள், அதிகம் செறிவாக உள்ளன.

கண்டல் தாவரங்கள், தாம் வாழும் இடத்துக்குப் பெரிய உதவி செய்கின்றன. இதில் முக்கிய பங்கு, அதன் இலை குழைகள் கீழ் விழுந்து, நீர் மூலம் கழிமுகம் கடற்கரைப் பகுதிகளுக்கு கடத்தப்பட்டு, அங்குள்ள பகுதியில் கூட்டுச் சமூகத்தால் பயன் படுத்தப்படுகின்றது. இங்குதான் இப்பகுதியில் இறால் இனங்கள் தமது இனப்பெருக்க இடமாக பயன்படுத்தி வாழ்கின்றன. அதற்கான சிறந்த சூழல் இப்பகுதியில் காணப்படுகின்றது. கண்டல் தாவரங்கள் இறால்ப் பாலத்துக்கும் கட்டைபறிச்சானுக்கும் அழகு தருகின்றன.

மூதூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கட்டைபறிச்சான் தெற்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள இறால்ப் பாலம், மழை அடைமழை காலத்தில் பாலத்தை ஊடறுத்து வெள்ளநீர் பாய்வதையும் அவதானிக்க முடியும். இதனால் இப்பாலத்தைப் பயன்படுத்தும் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டும் வருகின்றனர். இப்பாலத்தின் பல இடங்கள் உடைந்த நிலையில் காணப்படுகின்றன. போக்குவரத்தும் இதனால் பாதிப்படைகின்றது.

அண்மையில், முதியவர் ஒருவர் பாதிக்கப்பட்டதுடன், இரண்டு மாடுகள் உயிரிழந்தமையும் இப்பாலத்தின் ஆபத்தான நிலைமையைப் பறைசாற்றுகின்றன. இது தொடர்பில் மக்கள் விசனம் கொண்டுள்ளனர்.

அதன் தொடர் நிகழ்ச்சியாக, அனர்த்தம் நிகழ்ந்த இடமான இறால் பாலத்தின் அருகாமையில் இறால்ப் பாலத்தைப் புனரமைக்கக்கோரி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதப்பட்ட மகஜரில் பொதுமக்கள் கையொப்பமிட்டனர். குறித்த பாலத்தினூடாகப் பயணிக்கும் அனைவரும் குறிப்பிட்ட மகஜரில் ஆர்வத்துடன் கையொப்பங்களை இட்டனர்.

கட்டைபறிச்சான் வட்டார பிரதேச சபை உறுப்பினர் ந.கரிஹரகுமார், மூதூர் பிரதேச சபைத் தவிசாளரின் உதவியுடன் பொதுமக்களுடன் இணைந்து பாலத்தை அடையாளப்படுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டார். ஆனால், இன்று வரை புனரமைப்புக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. எனவே இவ் விடயத்தில், மக்களின் நன்மை கருதி அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?







# கற்பிட்டி கருவாடு

## ஒவ்வொரு கருவாட்டுக்கும் ஒவ்வொரு வாசனை



ரஸீன் ரஸ்மின்



புத்தளத்துக்கு வருகை தரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், கற்பிட்டி நகருக்கு விஜயம் செய்து, ஆசையோடு சமைத்து உண்ணுவது மாத்திரமன்றி, அங்கிருந்து திரும்பிச் செல்லும் போதும் கட்டாயம் கற்பிட்டி கருவாடு வாங்கிச் செல்வதற்கு மறக்கவே மாட்டார்கள்.

வாய்க்கு எவ்வளவு ருசியான சாப்பாடு கிடைத்தாலும், பழைய சோற்றுடன் வெங்காயம், பச்சை மிளகாய் சேர்த்து, சுட்ட அல்லது பொரித்த உப்புக் கருவாட்டுடன் சாப்பிடும் ருசி என்பது, தனி ருசிதான். அவ்வாறு சாப்பிட்ட யாராலும் அந்தச் சாப்பாட்டின் ருசியை, அவ்வளவு எளிதில் மறக்க முடியாது.

உப்புக் கருவாடு எங்கும் கிடைப்பதில்லை; ஒருசில இடங்களில் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும். புத்தளத்தில் உப்புக் கருவாட்டுக்கு பெயர் போன இடம் கற்பிட்டி ஆகும்.

கற்பிட்டி நகரில் ஆணவாசல, துறையடி, தீவு போன்ற இடங்களில்தான் அதிகளவில் கருவாடு உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் கருவாடு, கற்பிட்டி நகரில் உள்ள கடைகளில் விற்பனைக்காக வைக்கப்படுகிறது. அதுமாத்திரமின்றி, கற்பிட்டி கருவாட்டை உற்பத்தி செய்யும் மீனவர்கள், அதனை விற்பனை செய்வதற்குப் பெரிதும் கஷ்டப்படுவதில்லை.

குறித்த கருவாடுகளைக் கொள்வனவு செய்வதற்காக உள்ளூர், வெளியூர் வியாபாரிகள் போட்டி போட்டுக்கொள்வார்கள். ஒவ்வொரு கருவாட்டுக்கும் ஒவ்வொரு வாசனை.

எங்கு பார்த்தாலும் சூரை, கீரி, கட்டா, காரல், தளப்பத்து என எல்லா வகையான கருவாடுகளும் அழகான முறையில் நேர்த்தியாக அடுக்கியும் தொங்கவும் விடப்பட்டிருக்கும். அதில் விஷேசம், அனைத்துக் கருவாடுகளும் ஒரே மாதிரியாக சுத்தம் செய்யப்பட்டுள்ளதும், சுத்தமாக இருப்பதுமாகும்.

கற்பிட்டி நகரில், கருவாடு உற்பத்தி செய்து வரும் உற்பத்தியாளர்களை அவர்களது வாடியில் சந்தித்தபோது, யோஸப் என்பவர் பின்வருமாறு கூறுகின்றார். “கருவாட்டு உற்பத்தியில், முன்பு போல வியாபாரம் இப்போது இல்லை. மீன்களை குறைந்த விலையில் விற்பதற்கு மீனவர்கள் தயங்குகின்றனர். கருவாட்டை அதிக விலை கொடுத்துவாங்க மக்கள் மறுக்கின்றனர். இலாபம் இல்லாவிட்டாலும், செலவுகளையாவது சமன்செய்யும் அளவுக்கு காசு கிடைத்தால் போதும் என்ற நிலையில், கருவாட்டு உற்பத்தி செய்கிறோம். நான் பத்து வருடங்களாக மீன்பிடித் தொழிலை செய்து வந்தேன். மீன்பிடித் தொழிலில் அதிக இலாபம் கிடைத்தது. கற்பிட்டி கருவாட்டுக்கு எங்கும் அதிக கேள்வி இருந்தமையால், மீன்பிடித் தொழிலை விட்டுவிட்டு, கருவாடு உற்பத்தி செய்ய ஆரம்பித்தேன். நான் மீன் பிடிப்பதற்காக கடலுக்கு செல்வதில்லை. மீன் வாடிகளில் இருந்து கிடைக்கும் நல்ல மீன்களையே, கருவாடு உற்பத்தி செய்யப் பயன்படுத்துகிறோம்” என்றார்.

அப்போது இடையில் குறுக்கிட்டு, “பெரும்பாலும் பழுதடைந்த மீன்கள்தான் கருவாடு செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்கிறார்களே, இது உண்மையா” எனக் கேட்டேன்.

“அப்படிச் செய்பவர்களும் இருக்கிறார்கள்; மறுப்பதற்கில்லை. ஆனால், நான் அப்படி செய்வதில்லை. சுத்தமான மீன்களைக் கொள்வனவு செய்தே, கருவாடு செய்கின்றேன். வாடியில் இருந்து கொண்டுவரப்படும் கட்டா, கெளுர், செரயா, குளுவி, சூரை, கீரி போன்ற மீன்களை நன்றாகக் கழுவி, வெட்டி, தூள் உப்பிட்டு, ஒரு நாளைக்கு அப்படியே உலர வைப்போம். பொதுவாக எல்லாக் கருவாடுக்கும் மக்கள் மத்தியில் வரவேற்புள்ளது.

கட்டாக் கருவாடு ஒரு கிலோ கிராம் 1,200 ரூபாய்க்கும், பெரிய கெளுர் ஒரு கிலோ கிராம் 1,100 ரூபாய்க்கும், காரல் ஒரு கிலோ கிராம் 250 ரூபாய்க்கும், செரயா ஒரு கிலோ கிராம் 1,000 ரூபாய்க்கும், கட்டுத் திருக்கை ஒரு கிலோ கிராம் 500 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

உலர வைத்த மீன்களை மறுநாள், எடுத்து மீண்டும் அதனை நன்றாகக் கழுவி, பின்னர் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்தி காயவைப்போம். பறவைகள், பறவைகளின் எச்சங்கள், விலங்குகள், அதனது எச்சங்கள் என்பன படாத வகையில் கருவாட்டை நன்றாகக் காயவைத்து எடுப்போம். இந்தக் கருவாடு பல மாதங்கள் அப்படியே பழுதாகாமல் இருக்கும். நிறமும் அதனது மணமும் குறையாமல் அப்படியே இருக்கும்.

மழைக் காலங்களில்தான் கருவாடு காயவைப்பதற்கு பெரிதும் சிரமமானது. அப்போதுதான் அதிகளவில் நட்டத்தையும் எதிர்கொள்ள வேண்டி வரும். மீன்கள் அதிகமாக பிடிக்கப்படும் காலங்களில், அதிக இலாபத்தை ஈட்டிக்கொள்ள முடியும். மற்றைய காலங்களில் கடனில்லாமல் சாப்பிடுவதற்கும் தொழிலாளர்களுக்கு சம்பளத்தை கொடுப்பதற்கும் சரியாகிடும்.

முன்பை விட தற்போது இந்தத் தொழிலில் போட்டித் தன்மை ஏற்பட்டுள்ளது. அதனால், கற்பிட்டி கருவாட்டுக்கு ஒரு நிரந்தர விலை இல்லை. ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான இலாபல் கிடைத்தால் போதும் என்று, தாம் உற்பத்தி செய்த கருவாட்டை சந்தையில் விற்பனை செய்கிறார்கள்.

சில நேரங்களில் இலாபத்தைக் கொடுக்கும்; சில நேரங்களில் பாரிய நட்டத்தையும் கொடுக்கும். எனது வாடியில் மூவர் வேலை செய்கிறார்கள். நானும், மனைவியும் மகனும் சேர்ந்து வேலை செய்வதால்தான் ஓரளவுக்கு நட்டமில்லாமல், இந்தத் தொழிலை முன்னெடுத்துச் செல்லமுடிகிறது. எனது வாடியில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு நாட்கூலிதான் கொடுக்கிறேன். சிரமப்படுவதற்கு உரிய ஊதியம், இதில் கிடைப்பதில்லை என்றாலும், சுத்தமான, தரமான கருவாட்டை நுகர்வோருக்கு கொடுக்க வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருக்கிறேன். சுத்தம் மிகவும் முக்கியமாகும். சுத்தமான கருவாடுகளை மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதில் நான் அன்று முதல் இன்று வரை உறுதியாக இருக்கிறேன்.

அதனாலேயே, இன்றும் எனது கருவட்டை பல இடங்களில் இருந்து தேடி வந்து, வாங்கிக் கொண்டு செல்கிறார்கள். அது மட்டுமன்றி, இங்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கூட, கற்பிட்டி உப்புக் கருவாட்டை மிகவும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

நூறு கிலோ கிராம் மீனை வெட்டினால், 48 கிலோ கிராம் கருவாடுதான் கிடைக்கும். ஆனால், அந்தக் கருவாடு உற்பத்திக்கான செலவு அதிகமானது. இறால் கருவாட்டின் விலையும் அதிகம் என்று யோஸப் தனது அனுபவங்களைப் பகர்ந்து கொண்டார். “கற்பிட்டி கடலில் பிடிக்கப்படுகின்ற மீன்கள் விற்பனைக்காக வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதால், இங்கு மீன்களுக்குத் தட்டுப்பாடு காணப்படுகிறது. மீன்களுக்கு தட்டுப்பாடில்லாமல் குறைந்த விலையில் கிடைக்குமானால், கருவாட்டையும் குறைந்த விலையில் விற்பனை செய்ய முடியும்” என்கிறார் இன்னொரு கருவாட்டு உற்பத்தியாளரான பர்னாண்டோ.

தரமில்லாத வெளிநாட்டு கருவாட்டை முகம் சுளிக்காமல் அதிக விலை கொடுத்து வாங்கும் நாங்கள், எமது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற தரமான கருவாடுகளை வாங்கத் தயக்கம் காட்டுகின்றோம். ‘விலை அதிகம்’ என்று குறைத்த விலைக்கு கொள்வனவு செய்ய முயற்சிக்கிறோமே தவிர, கருவாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கு தவறிவிடுகிறோம்.

கருவாட்டை உற்பத்தி செய்வதற்கு மீனவர்கள் எதிர் நோக்கும் கஷ்டங்கள் விவரிக்க முடியாதவை. நேரில் பார்ப்பவர்களுக்கு மட்டுமே அவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

என்னதான் சொல்ல முடியாத கஷ்டங்கள் ஏற்பட்டாலும், தம்மை நம்பி வாழும் நுகர்வோரான பொது மக்களுக்கு தரமான கருவாட்டைக் கொடுக்க வேண்டும் என நினைக்கும் கற்பிட்டி மீனவர்களின் கருவாட்டு வியாபாரம், எப்போதும் களைகட்டிக்கொண்டே இருக்கிறது என்பது மட்டும் உண்மை.



காலத்தின் தேவையறிந்த மட்டக்களப்பு விவசாயிகள்:

# கைகொடுக்கும் மஞ்சள்



வ. சக்திவேல்

shagthivel@gmail.com

“நான் ஒன்றரைப் பங்கு நிலத்தில் மஞ்சள் பயிரிட்டுள்ளேன். மஞ்சள் செய்கையில் குறைந்த செலவில் அதிகளவு இலாபத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும். மஞ்சள் செய்கைக்கு இயற்கையாகவே கிடைக்கும் வைக்கோல், மாட்டெரு ஆகிய இரு இயற்கைப் பொருட்களை மாத்திரம்தான் உரங்களாகப் பாவிப்பதுண்டு. வேறு இரசாயனங்கள் பாவிப்பது கிடையாது. அதிக வருமானமீட்டக்கூடிய இப்பயிச் செய்கையை மாவட்டத்திலுள்ள விவசாயிகளும், வீட்டுத் தோட்டங்களிலும் பயிரிட்டால் அதிகளவு இலாபத்தையும் வருமானத்தையும் பெற்றுக்கொள்ளமுடியும். எனவே முயற்சியுடையோர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பரந்துபட்ட அளவில் மஞ்சள் பயிர்செய்கையை மேற்கொள்வதற்கு முன்வந்தால், தொடர்ந்து வறுமை வறுமை என சொல்லிக்கொள்ள வேண்டிய தேவையும் எழாது” என்கிறார் றாணமடு கிராமத்தில் மஞ்சள் செய்கையில் ஈடுபட்டு வரும் க.நல்லையா.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட எல்லைப்புறக் கிராமங்களான றாணமடு, பூச்சுக்கூடு, 25ஆம் கெலனி, மாலையர்கட்டு, சின்னவத்தை உள்ளிட்ட பல இடங்களிலுள்ள மக்கள், மஞ்சள் பயிர் செய்கையில் ஆர்வம் காட்டிவருவதை அவதானிக்க முடிகின்றது.

தற்போதைய நிலையில் இரசாயனம் கலந்த கிருமிநாசினிகளை பயிர்களுக்கு விசிறுவதால் அதில் விளைகின்ற பொருட்களும் நஞ்சைச் சேமித்து வைக்கின்றன. இரசாயனப் பாவனையால் மனிதர்களுக்கும் நேரடியான தாக்கங்கள் ஏற்படுகின்றன. இதனால் பெரும் பாதிப்புகள் நேரடியாகவே ஏற்படுகின்றன. இந்நிலையில் குறைந்த நிலப்பரப்பில், குறைந்த முதலீட்டில், கூடிய வருமானம் பெறும் வாழ்வாதாரத் தொழிலாக மஞ்சள் செய்கையைப் பார்க்கமுடியும்.

க.நல்லையா தொடர்ந்து கூறுகையில், “அனைவரும் எம்மைப்போன்று எமது பகுதியிலுள்ள ஏனைவர்களும் இவ்வாறு மஞ்சள் செய்கையை மேற்கொண்டு, அதிலிருந்து அதிக வருமானம் பெறவேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம். அவ்வாறு முன்வருபவர்களுக்கு எம்மால் மஞ்சள் விதைகள் வழங்க முடியும். நாம் செய்வதை முன்னுதாரணமாகக் கொண்டு, எமது பகுதியிலுள்ள அனைவரும் மஞ்சள் பயிரிடுவதற்கு முன்வர வேண்டும்” என்றார்.

கூடிய நிலப்பரப்பில் அதிகளவு செலவு செய்து பூச்சித்தாக்கம், யானைகளின் தொல்லை, வெள்ளம், வரட்சி, உள்ளிட்ட பலவற்றுக்கும் முகம் கொடுத்து, இறுதியில் குறைந்த வருமானம் பெறும் விவசாயச் செய்கை, சிறு தொழில் முயற்சிகளை மேற்கொண்டுவரும் இத்தருணத்தில் மலையகத்தில், வெளிநாடுகளில் மேற்கொள்வது போன்றதான மஞ்சள் பயிர் செய்கையிலும், மட்டக்களப்பு மாவட்ட மக்கள் ஆங்காங்கே ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

நிலைமையறிந்த விவசாயிகள், சிறு சிறு தோட்டங்களாகவும் வீடுகளிலும் வயல்களிலும், இவ்வாறு மஞ்சள் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். மஞ்சள் பயிரிட்டு, எட்டு தொடக்கம் ஒன்பது மாதங்களில் அறுவடை செய்யப்படுகின்றது. சுமாராக ஒரு கிலோ கிராம் விதை மஞ்சள் 200 தொடக்கம் 500 ரூபாயாகும். ஒன்றரைப் பங்கு நிலத்தில் 25 கிலோ கிராம் மஞ்சள் நடப்படுகின்றது. அதற்கு இயற்கையாகவே கிடைக்கின்ற மாட்டெரு, வைக்கோல் இட்டுப் பராமரித்து வருகின்ற நிலையில், அறுவடை செய்தால் சுமார் 10 மூடை (அதாவது 500 கிலோ கிராம்) பச்சை மஞ்சள் அறுவடை செய்யலாம். ஒரு கிலோ கிராம் பச்சை மஞ்சள் 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. எனவே, ஒன்றரைப் பங்கு நிலப்பரப்பில், சுமார் 15,000 ரூபாய் செலவு செய்து 2,50,000 ரூபாய் வருமானம் பெறலாம் என அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அறுவடை செய்த மஞ்சளை இதுவரையில் அவ்வாறே பச்சை மஞ்சளாகவே விற்பனை செய்து வரும் மக்கள், அதனை மேலும் பதப்படுத்தி பாவனைக்கு உகந்த முறையில் மாற்றினால், தற்போது பெறும் வருமானத்தை விட மூன்று மடங்கு வருமானம் ஈட்டமுடியும் எனவும், குறிப்பாக, ஆறு கிலோ கிராம் பச்சை மஞ்சளைப் பதப்படுத்தினால், ஒரு கிலோ கிராம் உலர்ந்த கட்டி மஞ்சள் பெறலாம் எனவும் அதற்குரிய தொழில்நுட்பம், தம்மிடம் இல்லையாதலால் அறுவடை செய்தவுடனேயே, அம்பாறைப் பகுதியிலிருந்து வரும் மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வருவதாகவும், போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில் மஞ்சள் செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் இ.ராகுலநாயகி இதுகுறித்துக் கூறும்போது, “கடந்த வருடம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் உதவியுடன் எமது பகுதியில் மஞ்சள் பயிரிடுவதற்கான உதவிகள் சில வழங்கப்பட்டன. இவற்றினைவிட விவசாயிகளும், தங்களது சுயமுயற்சியில் மஞ்சள் பயிர் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது அரசாங்கத்தால் உழுந்து, இஞ்சி, பயறு போன்றவற்றின் விதைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் மஞ்சள் பயிரிடுவதற்குரிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனை அனுப்பியுள்ளோம். அவை கிடைக்கப் பெற்றதும் மேலும் மஞ்சள் பயிர் செய்கையை மேம்படும் என நினைக்கின்றேன்” என்றார்.

இதேவேளை, ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட விரிவாக்கல் உத்தியோகஸ்தர் திருமதி நர்த்தனா குகதாசன் இது தொடர்பாகத் தெரிவித்ததாவது: “மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போதைய நிலையில் மஞ்சள் பயிர் செய்கையை மேம்படுத்தியும் ஊக்குவித்தும் வருகின்றோம். 20 கிலோ கிராமுக்கு மேல் நடும் விவசாயி ஒருவருக்கு, 3,000 ரூபாய் வீதம் ஊக்குவிப்புத் தொகையை வழங்குகின்றோம். கடந்த வருடம் இவ்வாறு மாவட்டத்தில் ஐந்து இலட்சம் ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளோம். தற்போதைய நிலையில், மாவட்டத்தில் வெல்லாவெளி, செங்கலடி, கிரான் உள்ளிட்ட பல பகுதிகளிலுமாக சுமார் ஐந்து ஹெக்டயர் அளவில் மஞ்சள் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் அறுவடைக்குப் பின்னர், தொழில்நுட்ப ரீதியாக மேற்கொள்ளப்படும் விடயங்களுக்காக மாவட்டத்தில் இரண்டு தொழில்நுட்பப் பிரிவுகளை ஸ்தாபிக்கத் திட்டமிட்டுள்ளோம். மேலும் குறைந்த நிலப்பரப்பில் கூடிய வருமானத்தை ஈட்டக்கூடிய மஞ்சள் செய்கையை மாவட்டத்திலுள்ள ஏனைய விவசாயிகளும் மேற்கொள்ளக்கூடிய வகையில் எமது செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்” என்றார்.

எனவே, நர்த்தனாவின் கருத்து இவ்வாறு அமைகின்ற போதிலும், காலத்தின் தேவையறிந்து ஏற்றுமதிப் பயிராகக் காணப்படும், மஞ்சள் செய்கையை மட்டக்களப்பிலும் மேற்கொண்டு வரும் விவசாயிகளை இனம்கண்டு, அவர்களுக்கு வேண்டிய மேலதிக உதவிகளையும் வழிவகைகளையும் மேற்கொண்டு வழங்க வேண்டியது துறைசார்தோரின் தலையாய கடமையாகும். அரசால் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்படும் திட்டங்களுக்கு உந்து சக்தியளிப்பதுபோல், காலநிலைக்கு ஏற்ப தகுந்த காலத்தில் குறுகிய நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படும் மஞ்சள் போன்ற பயிரினங்களை மேற்கொண்டு வரும் விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளை நல்க, மக்கள் பிரதிநிதிகளும், செயற்பாட்டு ரீதியாக அதிகாரிகளும் உடன் திட்டவரைபுகளை மேற்கொண்டு, அவற்றை நடைமுறைப்படுத்தும் பட்சத்திலேயே, இன்னும்பல விவசாயிகள், மஞ்சள் போன்ற பயிர்களை நட்டு, வாழ்வில் வசந்தத்தைக் கொண்டு வரமுடியும் என எதிர்பார்க்கின்றனர்.

# உலை வைக்க சிந்திக்கும் மக்களுக்கு பதில்கூற வேண்டும்

சந்தைகளில் அரிசியின் விலை, தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இதனால், ஓரிரண்டு வேளைகளுக்கு மட்டுமே உலை வைத்த குடும்பத்தினர், உலை வைப்பதைப் பற்றிச் சிந்திக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குள் சிக்கியுள்ளனர்.

"அரிசியில் தன்னிறைவு கண்ட நாடாக மாற்றுவோம்" எனக்கூறிய காலம் மலையேறிவிட, வெளிநாடுகளிடம் கையேந்த வேண்டிய நிலைமைக்குள் நாடு தள்ளப்பட்டுள்ளது. தூரநோக்கற்ற, அதிரடியான தீர்மானங்களால், விவசாயிகள் பெரும் துன்பங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அடுத்தடுத்த போகங்களைப் பற்றியல்ல, ஒரு போகத்தை மட்டுமேனும் சிந்திக்க முடியாத அளவுக்கு உள்ளனர்.

'விவசாயி, சேற்றில் கால்களை வைத்தால்த்தான், ஒவ்வொருவரும் சோற்றில் கையை வைக்கமுடியும்' எனக்கூறக் கேள்விப்பட்டிருக்கின்றோம். நமது நாட்டை பொறுத்தவரையில், சேற்றில் அல்ல; வீதிகளில் இறங்கி விவசாயிகள் போராட வேண்டிய நிலைமைக்குள், இவ்வரசாங்கம் விவசாயிகளையும் வீதிக்கு இழுத்துவிட்டது.

பசளைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. ஆகையால், மற்றுமொரு போகத்தைப் பற்றிச் சிந்திக்க முடியாத அளவுக்கு விவசாயிகள் உள்ளனர்.

இரசாயன மற்றும் சேதனப் பசளைகள் தொடர்பில், நன்கு ஆராய்ந்ததன் பின்னர், அரசாங்கம் முடிவெடுத்திருக்குமாயின் இவ்வாறான பிரச்சினைக்கு முகங்கொடுத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

வெவ்வேறான விவசாய நிலங்கள், வெவ்வேறான பசளைகளுக்கு இசைவாக்கம் அடைந்திருக்கும். அவ்வாறு பயன்படுத்தப்பட்ட ஒருவகை பசளையை உடனடியாகக் கைவிட்டுவிட்டு, மாற்றுப் பசளைக்குச் சென்றால் போதியளவான விளைச்சலை எதிர்பார்க்க முடியாது. பற்றாக்குறையான விளைச்சல், எதிர்காலங்களில் பெரும் பாதகத்தை ஏற்படுத்தும்.

சாதாரண மக்கள் தங்களுடைய தேவைகளுக்காக எடுத்துக்கொள்ளும் சாதாரண அரிசி, ஒரு கிலோ கிராமின் ஆரம்ப விலை, 160 ரூபாயில் ஆரம்பித்து, 230 ரூபாய் வரையிலும் செல்கிறது. போதியளவான வருமானம், மேலதிக வருமானம், நாட்கூலிக்கு வேலை செய்து குடும்பம் நடத்துவோரின் நிலைமையை நினைத்துக்கூட பார்க்க முடியாமல் இருக்கின்றது.

எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக, ஒரு கிலோ கிராம் அரிசியின் விலை, 300 ரூபாய்க்கும் 450 ரூபாய்க்கும் இடையில் கொள்வனவு செய்யவேண்டிய நிலைமையொன்று ஏற்படுமென எதிர்க்கட்சியினர் உட்பட பலரும் எதிர்வு கூறுகின்றனர்.

போகின்ற போக்கைப் பார்க்குமிடத்து, அவ்வாறான நிலைமையொன்றுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுமோவென மக்கள் அச்சம் கொள்கின்றனர்.

இதற்கிடையில், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யவிருப்பது இறப்பர் அரிசி என்றும், அதனால் பல்வேறான உடற்கோளாறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கின்றனவென பல தரப்பினரும் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். பசியை விடவும், இறப்பர் அரிசியால் ஏற்படும் நோய்கள் குணப்படுத்த முடியாதவையென, அத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

அரிசிக்கு நிர்ணய விலையை நிர்ணயிப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதனூடாகவேணும் சாதாரண மக்களின் வீடுகளில் எந்நாளும் உலை வைப்பதற்கு உத்தரவாதமளிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


நினைவு கூரல்களுக்கான

# தடை என்ற ஜனநாயக மீறல்

**லக்ஸ்மன்**

நினைவுகூரல்களுக்கும் நீதி கோரல்களுக்கும் விதிக்கப்பட்டு வருகின்ற தடையானது மிக மோசமானதொரு ஜனநாயக மீறல் என்பதை அறியாதவர்களாகவே இலங்கையின் அரசாங்கமும் அதன் படைகளும் பாதுகாப்புத் தரப்பினரும் இருந்து வருகின்றனர். அதற்குரிய மாற்று நடவடிக்கையினை யார் முன்னெடுப்பது என்பதே இப்போதைக்கு எல்லோரிடமும் உள்ள கேள்வி. ஆனால் ஏதோ நடப்பதெல்லாம் நடக்கட்டும் நமக்கென்ன என்றிருப்பவர்கள் அதிகமாகிக்கொண்டே வருகின்றனர் என்பதே கவலை.

முக்கியமாக போராட்டம் நடைபெற்று அப்போராட்டம் மௌனிக்கப்பட்ட இலங்கையில், அதிகமாகவே படுகொலைகள், கொலைகளுக்கான நினைவு கூரல்களைக் கூட யாரும் செய்துவிடமுடியாதளவுக்கான அடக்குமுறைகள் நடைபெறுகின்றன. அதே நேரத்தில் நடைபெற்ற அநீதிகளுக்காக நீதிகளைக் கோர முடியாதளவுக்கு நிலைமை காணப்படுகிறது. "நடைபெற்றவைகளை மறந்துவிடுங்கள்" என்று சொல்வதைவிடவும், அவை மறைக்கப்பட்டு மறந்துவிடும் படியான செயற்பாடுகளே நடைபெறுகின்றன.

உலகின் பல நாடுகளில் படுகொலைகள் பலவிதமான நடைபெற்றிருக்கின்றன. அவை ஒரு நாடால் இன்னொரு நாட்டிலும், சொந்த நாட்டுக்குள் அதன் அரசாங்கங்களாலும், ஒரு நாட்டினுடைய அதிகார வர்க்கத்தினராலும் இனங்களுக்கெதிரானவும் பண்பாடுகளுக்கெதிராகவும் பல முறைகளில் நடைபெற்ற வரலாறுகள் காணப்படுகின்றன. இவற்றுக்கு உதாரணமாக, ஆர்மீனிய இனப்படுகொலை, அசிரிய இனப்படுகொலை, கம்போடிய இனப்படுகொலை, ருவாண்டா இனப்படுகொலை என ஒரு சிலவற்றைக் கூற முடியும்.

இந்த வகையில் இலங்கையில் நடைபெற்ற படுகொலைகள் தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் மீதானவைகளாக இருக்கின்றன என்பதனை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால், இலங்கை தமிழர் இனப்படுகொலை என்பது, பெரும்பான்மை பேரினவாத சிங்கள அரசு கலவரங்களை ஏற்படுத்தியும் வானூர்திகளில் இருந்து கண்மூடித்தனமாக குண்டு வீசியும் எறிகணைகளை வீசியும் நேரடியாகச் சுட்டும் சித்திரவதை செய்தும் தமிழர்களைப் படுகொலை செய்த வரலாறுகளே அதிகம். இதனை திட்டமிட்ட இன அழிப்பாகவே வரலாறுகளில் பதிவு செய்தல் வேண்டும்.

இலங்கையில், தமிழர்களை நாட்டைவிட்டு வெளியேறச்செய்து அவர்களின் விகிதாசாரத்தைக் குறைத்தல், அல்லது தமிழர்களின் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு விகிதாசாரத்தைக் குறைத்து, அங்கிருக்கும் தமிழர்களின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் காலங்காலமாக அரசாங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது.

குறிப்பாக, தமிழர்களின் நியாயமான பிரச்சினைகளுக்கு எவ்வித நடைமுறைத் தீர்வுகளையும் முன்வைக்காது, பொது மக்களைப் பொருட்படுத்தாது மேற்கொள்ளப்பட்ட போரில், ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கான ஆதாரங்கள் இருக்கிற போதும் அவற்றினை அரசு சட்டை செய்யவில்லை. இதற்கான மனித உரிமை போராட்டமே ஐக்கிய நாடுகள் சபையை நம்பி ஒவ்வோர் அமர்விலும் தமிழர் தரப்பால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1948ஆம் ஆண்டில் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட நாள்முதல் நடைபெற்று வருகின்ற தமிழ் மக்களுக்கெதிரான செயற்பாடுகள் இன்னமும் ஓய்ந்தபாடில்லை. அந்நாள்முதல் தமிழர்களின் மனித உரிமைகளை மீறி திட்டமிட்ட இனவழிப்பை நடத்திவருகிறது என்பதே தமிழர்களின் வாதம். அந்த வாதம் உள்நாட்டுக்குள் எடுபடாத ஒன்றாக இருக்கையில், இந்த நகர்த்தலை புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

சிங்கள மொழிக்கு, சிங்களவர்கள் பின்பற்றும் பௌத்த சமயத்துக்குச் சிறப்புரிமைகள் காணப்படுகின்ற நிலையில் தமிழர்களின் கல்வி வேலைவாய்ப்புகளை அபகரித்து, திட்டமிட்ட குடியேற்றங்களை நிகழ்த்தி, நியாமற்ற முறையில் கைதுசெய்து சிறையில் அடைத்தல் என, நீண்ட உரிமை மீறல் நடைபெறுகையில் அதற்கெதிராகப் போராட வேண்டிய நிலைக்கு தமிழர் தரப்பு தள்ளப்பட்டது என்பதே வரலாறாக இருந்தாலும் அடிமைகளாகவும் வாய்பேசா மடந்தைகளாகவும் தமிழர்கள் வாழவேண்டும் என்பதற்கான அழுத்தங்களையே பட்டியலிடப்படும் படுகொலைகள், அழிவுகள் தொடர்பான நினைவுகூரல் நாள்களில் நடைபெறுகின்றன.

ஆரம்பத்தில் பொதுமக்கள் கூடுவதால் கலவரங்கள், பிரச்சினைகள் ஏற்படலாம் போன்ற வேறுவேறு காரணங்கள் சொல்லப்பட்டாலும் இப்போதைய கொவிட் சூழலை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் வகையில் நீதிமன்றங்களை நாடி தடையுத்தரவுகளைப் பெறுதல் பொலிஸாரின், பாதுகாப்புத்தரப்பினரின் வேலைகளாக இருக்கின்றன.

தமிழர்களின் மனித உரிமைகளை சிங்கள அரசுகள் மீறின என்பதற்கன ஆதாரங்களாக இருந்து கொண்டிருக்கின்ற படுகொலைகள், மறைக்கப்படுவதற்கு இவை காரணமாக இருக்கும் என்று அரசும் அதன் பாதுகாப்புத் தரப்பினரும் நம்பிக்கை கொண்டிருப்பதே அதன் உள்நோக்கமாகும். ஆனால் இவ்வாறான அடக்கு முறைகள், நெருக்குதல்கள் மென்மேலும் எதிர்ப்புகளையும் எதிர்ச்செயற்பாடுகளையும் கொண்டுவரும் என்பதனை அவர்கள் மறந்துவிடுகிறார்கள்.

யுத்தம் மௌனிக்கப்பட்டது முதல் நடைபெறுகின்ற சர்வதேச அளவிலான மனித உரிமை மீறல்களுக்கெதிராக இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பான அழுத்தங்களால் எந்தப் பயனும் ஏற்பட்டதாக இல்லை. ஆனாலும் தமிழர்கள் வருடா வருடம் முயன்றே வருகிறார்கள். இந்த நிலையில்தான் இலங்கை அரசாங்கத்திற்கு உதவி புரிந்த பிரிட்டன், அமெரிக்கா போன்ற சர்வதேச நாடுகள், அண்டை நாடான இந்தியா போன்ற நாடுகள் தமிழர்களுக்கு உதவியாக வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டும் இருக்கிறது.

தமிழர்கள் தங்கள் பாரம்பரியமான சடங்கு முறைகளைக் கூட நடத்துமுடியாதளவுக்கு இலங்கையில் நெருக்குதல்கள் நிறைந்து காணப்படுகின்றன. அதற்கு கடந்த வருடத்தில் பாரம்பரியமான கார்த்திகை தீபத்தினைக்கூட அவர்கள் ஏற்றி மகிழக்கூடாது என்கிற கடப்பாட்டைக் குறிப்பிட முடியும். இவ்வாறான தடைகளை மீறிய செயற்பாடுகளுக்கு அவர்களை தள்ளிவிடுகின்ற நிலையே இவற்றால் உருவாகின்றன. மரணித்த உறவுகளுக்கான அஞ்சலியைச் செலுத்தி ஆறுதலடைவதற்கான உரிமையைக் கூட வழங்க முடியாதளவுக்கான ஜனநாயக மீறலுக்கு எவ்வாறு பெயர் வைப்பது என்பது இந்த இடத்தில் கேள்வியாக இருக்கிறது.

ஆனால், இலங்கையின் இனப்பிரச்சினையால் உருவான விடுதலைப்புலிகள் இயக்கம் அழிக்கப்பட்ட நிலையில், அவர்களால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கான நீதி எவ்வாறு வழங்கப்பட முடியும் என்ற வகையில் இலங்கை அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டவைகளும் மறக்கப்பட வேண்டும் என்ற சமப்படுத்தல் முன்வைக்கப்படுவது பிழையான அணுகுமுறையாகவே கொள்ளப்பட வேண்டும். இதில் நகைப்பான விடயம் என்னவென்றால் தமிழர்களின் ஒரு சில தரப்புகளே இவ்வாறான நிலைப்பாடுகளுடன் இருப்பதுதான்.


கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இவ்வாறான மோசமான கட்டுப்பாடுகள், எதற்கெடுத்தாலும் நீதிமன்றத் தடையுத்தரவு பெறுகின்ற, போராட்டங்கள் நினைவு கூரல்களை நிகழ்த்துவதற்காக தங்களது மன ஆளக்கருத்துகளை சமூக ஊடகங்களில் பதிவதற்காக என கைதுகள் நடைபெற்றிருக்கவில்லை. ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் இவை மிகவும் மோசமாகவே இருக்கின்றன.

நேற்றைய தினம் கொக்கட்டிச்சோலை மணிழடித்தீவு இறால் பண்ணைப் படுகொலை நினைவு தினமாகும். இதனை வருடா வருடம் நடத்தும் அவர்களுடைய உறவினர்கள் கிராமத்தவர்களுக்குக் கூட தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படுகொலையானது உண்மையில் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் காலத்தில் நடைபெற்றிருந்ததாகும். ஆனால் தற்போதைய அரசாங்கம், சுதந்திரக்கட்சி, பொதுஜன பெரமுன சார்ந்ததாகும். அந்த நினைவேந்தலுக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஏன் இந்த இடத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுக்குத் தடை விதிக்கப்படுகிறது என்று சிந்தித்தால், அதற்குக் காரணம் அந்தப் படுகொலையானது அரசின் இராணுவத்தினரால் நடத்தப்பட்டதாகும். இது போலவே அனைத்து படுகொலைகளும் அழிப்புகளும் நடைபெற்றிருக்கின்றன.

இலங்கையில் நினைவுகூரல்களுக்காக நடைபெறுகின்ற அடக்குமுறை ரீதியான தடைகளுக்கு முக்கியமான காரணம் நடைபெற்ற அத்தனை படுகொலைகளும் இலங்கை இராணுவத்தினர், இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டவர்கள், இராணுவத்தினரின் உதவியாக இருந்தவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டவையாகும்.

இராணுவத்தினருக்கெதிரான விடயங்களை மக்கள் மேற்கொள்கிறார்கள். பாதுகாப்புத் தரப்பினருக்கெதிராகச் செயற்படுகிறார்கள் என்ற பொதுமையில் இவற்றுக்கெல்லாம் தடைகள் கொண்டுவரப்படுகின்றன. ஆனால் போரில் மரணித்த இராணுவத்தினருக்காக நிகழ்வுகள் நடத்தப்பட்டே வருகின்றன. அதே போன்று கார்த்திகை வீரர்கள் எனும் மக்கள் விடுதலை முன்னணியினரின் நிகழ்வுகள் கூட நடைபெறுகின்ற போது, பொது மக்கள் கொல்லப்பட்ட படுகொலைகளை நினைவுகூர முடியாதளவுக்கான கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கு தமிழர்கள் என்று பிரிப்புப்பார்வையே காரணம் என்ற முடிவுக்கு வர முடிகிறது.

இந்த வகையில்தான், நாட்டுக்குள்ளேயே வேறு ஒரு நாட்டக்கெதிரான யுத்தத்தினை நிகழ்த்திய பதிவுள்ள இலங்கையில் தம் உறவினர்களை நினைவுகூருவதற்குகூட அனுமதியில்லாத ஜனநாயக மீறல்கள் நடைபெறுகின்றன. இந்த மீறல்களுக்கு எங்கெங்கே நீதியைத் தேடுவது என்பதே எல்லோர் மத்தியிலும் இருக்கின்ற கேள்வி.



## வாழ்வியல் தரிசனம்

மௌனத்தை ஒருசிலர் சுயநலத்துக்காகப் பயன்படுத்துகின்றனர். எவருக்காவது உதவிகளைச் செய்யவேண்டும் எனும் நிர்ப்பந்தங்கள் வந்தால், மௌனமாக அந்த இடத்தைவிட்டு விலகிவிடுவார்கள்.

கண்டபடி பேசுபவர்கள் எப்பொழுதும் தங்கள் பெருமைகளையும் செல்வாக்குகளையும் சொல்லியபடி இருப்பார்கள். ஆனால், தங்களால் முடிந்த சின்னச் சின்னக் காரியங்களையும் செய்யாமல் ஒளிந்து கொள்வார்கள். இதுவும் ஒரு நடிப்பான மௌன நிலைதான்.

நெஞ்சத்தை மறைத்து பொய்மை நிலையுடன் வாழும் வாழ்க்கை, சிறை வாழ்க்கை போன்றதாகும்.

நடித்தபடி எப்போதும் வாழ முடியுமா? இதனால் தங்களைச் சுற்றி இருப்பவர்களிடம் அவமானப்பட நேரிடலாம்.

எல்லோரிடமும் பொருள்தேட விரும்புபவர்கள், தங்களின் உண்மையான வசதிகளைச் சொல்லாமல் மௌனித்து விடுகின்றனர்.

மௌனம் நல்லதொரு நிலைதான். எங்களை அறிய மௌனம் உதவுகின்றது. எங்களிடம் அகச்சுத்த நிலையை உருவாக்குகின்றது. பொய்மைக்கு மௌன ஆயுதம் வேண்டாம்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

தண்ணிமுறிப்பு வயல்வெளி:

### வயல் நிலங்கள் காட்டு யானையால் அழிப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ், அதிகளவான விவசாயிகள் காலப்போக நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இந்த விவசாயிகளின் வயல் நிலங்களின் எல்லைப் பகுதிகளுக்கு, யானை வேலி இல்லாத நிலையில், தொடர்ச்சியாகக் காட்டு யானைகளின் தொல்லைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

காட்டு கரைப் பகுதிகளை எல்லையாகக் கொண்ட விவசாயிகள், யானைக்கு காவல் காத்து வந்தாலும், காட்டு யானைகள் விவசாய நிலங்களை அழித்து வருகின்றன.

வனஜீவராசிகள் திணைக்களம், யானை வெடியை விவசாயி ஒருவருக்கு இரண்டு வெடிகள் என்ற கணக்கில் கொடுக்கின்றார்கள், இருந்தும் யானைகள் வெடிகளுக்குக் கட்டுப்படுவதாக இல்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

கடந்த ஆண்டு காலபோக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளில், 62 விவசாயிகளின் 196.5 ஏக்கர் வயல் நிலம், யானைகளால் அழிக்கப்பட்டுள்ளதாக கமநலசேவை நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


செ. கீதாஞ்சன்



### கிழக்கில் கூட்டுறவு சங்கம் தோறும்

# தனியார் கல்வி நிலையங்கள் உருவாக்கப்படும்

## கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அஸ்மி நம்பிக்கை



வி.ரி சகாதேவராஜா







"கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் நலிவுற்றிருந்த கூட்டுறவுத்துறை, இனிமேல் பாரிய வியத்தகு திட்டங்களுடன் பலபரிமாணங்களுடன் தனிப்பெரும்துறையாக ஜொலிக்கும். அதற்காக மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவுச்சங்கங்களும் எம்முடன் ஒத்துழைத்துப் பயணிப்பார்கள்" என்று கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

காரைதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய 'கோப் பிரஷ்' கடைத்தொகுதி, திங்கட்கிழமை (24) சங்கத்தலைவர் வை.கோபிகாந்த் தலைமையில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எம். அஸ்மி ஆதம்லெவ்வையால் நாடாவெட்டி உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

திறப்புவிழாவில் ப.நோ. கூ.சங்கத்தலைவர் வை. கோபிகாந்த் தலைமை உரையாற்ற, முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி சகாதேவராஜா, காரைதீவின் கூட்டுறவுத்துறை வரலாறு பற்றி சிறப்புரையாற்றினார்.

கௌரவ அதிதிகளாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.வி. தங்கவேல், காரைதீவு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ. முஹம்மட் அன்வர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில், மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எம்.அஸ்மி மேலும் உரையாற்றுகையில்; கிழக்கு மாகாணத்தின் கூட்டுறவுத்துறையை பாரமெடுத்து ஒரு வருடமாகின்ற இவ்வேளையில், கிழக்கிலுள்ள சங்கங்கள் குறைந்தது ஒரு வியாபார நிலையத்தையாவது நடத்தவேண்டும் என்ற சிந்தனைக்கு வெற்றி கிடைத்துள்ளது. கூட்டுறவுத்துறையை சக்திமிக்கதாக மாற்றவேண்டும் என்பதற்காக, 'கோப் பிரஷ்' பல்பொருள் அங்காடிகளைத் திறந்து மக்களுக்கு சேவையாற்றி வருகின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் ஏழாவதும் கல்முனைப் பிராந்தியத்தில் இரண்டாவதுமான 'கோப்பிரஷ்' காரைதீவில் திறந்துவைப்பதற்காக உழைத்த கோபிகாந்த், பொதுமுகாமையாளர் ரமேஸ்குமார் உள்ளிட்ட சபையினர் பாராட்டுக்குரியவர்கள்.

இதேபோன்று, ஒவ்வொரு சங்கத்திலும் தனியார் கல்வி நிலையங்களை நடத்த திட்டமிட்டு வருகின்றோம். காரைதீவிலும் அது நடைமுறைப்படுத்தப்படும். அதேபோல் இங்கு ஊர் சார்பாகப் பேசிய உதவிக் கல்விப்பணிப்பாளர் சகாதேவன் ஐயா, இங்கோர் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றின் அவசியம்பற்றி எடுத்துரைத்து, வேண்டுகோளையும் முன்வைத்தார்.

> **'சோர்வு' என்ற பதம், கூட்டுறவுத்துறைக்கு மாத்திரம் உரித்தானதாக இருக்கமுடியாது. முயற்சியுடன் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். பல பரிமாணம்மிக்க துறையாக, கூட்டுறவுத்துறையை மாற்றுவதற்குக் கைகோர்ப்போம்**

உண்மையில், இப்படித் தீர்க்கதரிசனமாக திட்டத்துக்கு நானும் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவேன். இதுபற்றி, கொழும்பில் அமைச்சருடன் கலந்துரையாடுகையில் சங்கங்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தை நடத்த அனுமதி வழங்குவதனூடாக, மக்களுக்கான சேவையை வழங்குவது மட்டுமல்லாமல், சங்கங்களுக்கு ஒரு நிலையான வருமானத்தை பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கும் என எடுத்துக் கூறியுள்ளேன்.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை, தனியாருக்குக் கொடுத்தால், அதன் இலாபம் அவரது சட்டைப்பைக்குள்ளேயே போய்ச்சேரும். மாறாக, கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி வழங்கினால், அதன் இலாபம் மீண்டும் மக்களுக்கே போய்ச்சேரும். அவ்வகையில், சங்கங்களும் சக்தி பெறும்; மக்களும் சேவை பெறுவார்கள்.

கூட்டுறவுத்துறை அபிவிருத்திக்காக, சங்கங்களுக்கு களவிஜயம் மேற்கொண்டேன். நுகர்ச்சிக் கிளைகள் பின்னடைந்திருந்தன. கிழக்கில் மூன்று 'கோப்பிரஸ்' திறக்க அங்கிகாரம் கிடைந்திருந்தது. ஆனால், எனது முயற்சியின் காரணமாக 16 'கோப் பிரஷ்' திறக்க வழிகிடைத்தது. இது வெற்றி. அரசிடமிருந்து எட்டு மில்லியன் ரூபாவைப் பெற்று, அதை செங்கலடி நிகழ்வில் வழங்கியிருந்தேன்.

கூட்டுறவுத்துறையை வளர்ச்சிடையச் செய்ய வேண்டும்; எழுச்சியடையச் செய்ய வேண்டும் என்று கூறுகின்ற நாங்களே, அதை விமர்சிப்பவர்களாக இருப்பதுதான் கவலைக்குரிய விடயமாகும்.

சங்கங்களின் நட்டத்தை ஈடுசெய்ய, மூன்று இலட்ச ரூபாயை அரசிடமிருந்து பெற்று வழங்கினேன். அனைத்துக்கும் அரசாங்கத்தை எதிர்பார்க்க முடியாது. உள்ளூராட்சி துறையைப்போல், எமது கூட்டுறவுத்துறையும் சுயாதீனமாக இயங்குபவை. எனவே, நாமே வருமானத்தை ஈட்டும் செயற்பாட்டில் ஈடுபடவேண்டும். 'சோர்வு' என்ற பதம், கூட்டுறவுத்துறைக்கு மாத்திரம் உரித்தானதாக இருக்கமுடியாது. முயற்சியுடன் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

கிழக்கில், இத்துறையை சக்திமிக்க துறையாக மாற்ற ஐந்து வருடங்களாவது என்னை இந்தப் பதவியில் வைத்திருக்க வேண்டும் என்று ஆளுநரிடம் கேட்டுள்ளேன். கிழக்கில் 16 சங்கங்கள் மாத்திரமே உயிர்ப்பாக இயங்கிவந்தன. அதனை மாற்றி, அனைத்துச் சங்கங்களும் எமது சக்திமிக்க பயணத்தில் இணையவேண்டும்.

2022ஆம் ஆண்டில் அபிவிருத்தித் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. 'கோப் பிரஷ் மில்க் சென்ரர்' அமைக்கப்படவுள்ளது. காரைதீவு சபைக்காக மூன்று இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதை இந்தக் 'கோப் பிரஷ்' நிலையத்துக்கு அருகில் அமைக்கவேண்டும். மக்களை அண்மித்ததாக எமது சேவைகள் அமையவேண்டும்.

2022இல் கூட்டுறவின் வெற்றி, கல்வியை அபிவிருத்தி செய்வதில் தங்கியிருக்கிறது. எனவே, ஒருசில சங்கங்களுக்காக தனியார் பிரத்தியேக கல்வி நிலையங்களை அமைக்க முன்மொழிவை முன்வைத்துள்ளேன். குறைந்த செலவில் மாணவர்களுக்கு கல்வியை வழங்கலாம். இத்தகைய வாய்ப்பு திருக்கோவில், காரைதீவு போன்ற சபைகளுக்கும் கிடைக்கவிருக்கிறது.

புதிய விடயங்களை உட்புகுத்தவேண்டும். மாற்றங்களை எதிர்கொள்ளவேண்டும். கிண்ணியாவில் ஒசுசலவை அமைத்தோம். கல்முனைப் பிராந்தியத்திலும் அத்தகைய ஒசுசலவை அமைக்க எண்ணியுள்ளோம். எதிர்வரும் காலங்களில் பல பரிமாணம்மிக்க ஒருதுறையாக, கூட்டுறவுத்துறையை மாற்றுவதற்குக் கைகோர்ப்போம் என்றார்.

கூட்டுறவுத்துறையில் சிறப்பான சேவைக்காக ஆணையாளர் அஸ்மி, உதவி ஆணையாளர் தங்கவேல் ஆகியோருக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. நிகழ்வில் முன்னாள் தலைவர்கள், இயக்குநர் சபை உறுப்பினர்கள், ஊர்ப் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். காரைதீவு ப.நோ.கூ.சங்க பொதுமுகாமையாளர் எல்.எ. ரமேஸ்குமார் நன்றியுரையாற்றினார்.




### மல்வானை அல் முபாறக் தேசிய பாடசாலையின்

# நூற்றாண்டு விழா







மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், களனி கல்வி வலயத்துக்கு உட்பட்ட மல்வானை மண்ணில் கம்பீரமாய் வீற்றிருக்கும் அல் முபாறக் தேசிய பாடசாலை, தனது நூற்றாண்டு கால நிறைவையொட்டி மாபெரும் அங்குரார்ப்பண நிகழ்வை சனிக்கிழமை (2022/01/01) கொண்டாடியது.

பாடசாலை அதிபர் எஸ்.எச்.எம் நயீம் தலைமையில் பாடசாலை நிர்வாகம், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை நூற்றாண்டு விழாக்குழு என்பன இணைந்து, இவ்விழாவைப் பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்திருந்தன.

விழாவின் முதல் நிகழ்வாக, சமயத் தலைவர்கள், ஊர் பள்ளிவாசல், தரீக்காக்களின் நிர்வாகிகளின் பங்குபற்றுதலுடன் பாடசாலையில் அதிகாலை தொடக்கம் சமய நிகழ்வுகள் நடைபெற்றன.

காலை 10.00 மணி முதல் நூற்றாண்டின் அங்குரார்ப்பண நிகழ்வின் பிரதான வைபவங்கள் ஆரம்பமாகின. நிகழ்வின் பிரதம அதிதியாக, நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.யூ.எம் அலி சப்ரி கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக, பாடசாலையின் பழைய மாணவரும் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியுமான எம்.ரி.எம் லபர், இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாடசாலையின் பழைய மாணவருமான காதர் மஸ்தான் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும், பழைய மாணவர் சங்கத்தின் பிரதித் தலைவரும் முன்னாள் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியுமான அல்ஹாஜ் எம்.எம்.ஏ கபூர், நூற்றாண்டு அபிவிருத்திக் குழுத் தலைவரும் தனவந்தருமான அல்ஹாஜ் ஏ.ஆர். எம் லாபிர், அல் முஹ்ஸின் பவுண்டேஷன் ஸ்தாபகரும் தனவந்தருமான அல்ஹாஜ் எம்.எம்.ஏ இஸ்மாயில் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தியதுடன் பழைய மாணவர் சங்கத்தின் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து பிரிவின் பிரதித் தலைவரும் சர்வதேச வளவாளருமான இர்ஷாத் ஏ. காதர் மெய்நிகர் ஊடாக இணைந்து சிறப்புரையாற்றினார்.

ஒரு சகாப்த காலமாக கல்விப்பணியை சமூகத்துக்கு அயராது வழங்கிக் கொண்டிருக்கும் பாடசாலையின் நீண்டகாலத் தேவைகளுள் ஒன்றாக விளங்கிய வகுப்பறைகளுக்கான இடப்பற்றாக்குறையை நிவர்த்திக்கும் முகமாக, மல்வானையில் பிரபல தனவந்தர்களில் ஒருவரும் சமூக ஆர்வலருமாகிய அல்ஹாஜ் எம்.எம்.ஏ இஸ்மாயிலின் மகனாகிய அல்ஹாஜ் எம்.ஐ.எம் அஸ்கர், மூன்று மாடிக் கட்டடத்தைத் தமது சொந்த செலவில் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நட்டு வைக்கப்பட்டதோடு, பாடசாலையையும் மைதானத்தையும் இணைக்கும் வகையிலான மேம்பாலத்தைக் கட்டுவதற்கான அடிக்கல், அல்ஹாஜ் எம்.எம்.ஏ இஸ்மாயிலின் தலைமையில் இயங்கிவரும் அல் முஹ்ஸின் பவுண்டேஷன் குடும்ப அங்கத்தவர்களால் நட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வின் விசேட அதிதிகளாக, முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் குணசிறி ஜயனாத், மேல் மாகாண கல்விப் பணிப்பாளர் பி. சிறிலால் நோனிஸ், பாடசாலையின் பழைய மாணவர்களான இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் அக்தார் ஹஸன், கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம்.ஏ ஸாபிர் ஆகியோருடன் தனவந்தரும் சமூக சேவையாளருமான அல்ஹாஜ் அப்துல் காதரும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும், பிரதேச சபை உறுப்பினர்களான மொஹமட் அன்வர், மொஹமட் இர்ஷாத், மல்வானை பிரதேசத்தின் பொதுஜன பெரமுன கட்சியின் அமைப்பாளர் பாயிஸ் அஹமட் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

மாணவர்களது கலை நிகழ்ச்சிகளுடன் களைகட்டிய இவ்விழாவில், நூற்றாண்டு காலமாக அதன் பயணத்தில் பங்குதாரர்களாக விளங்கிய முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பெருந் திரளானோர் கலந்து சிறப்பித்ததோடு, பாடசாலை பழைய மாணவர் சங்கத்துக்கான உத்தியோகபூர்வ இணையத்தளம் www.mubarakians.lk என்ற பெயரில் நீதியமைச்சரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மிகப் பிரமாண்டமான முறையில் நடைபெற்ற பாடசாலை நூற்றாண்டுக்கான அங்குரார்ப்பண விழாவில், பாடசாலைக்கான கட்டடமொன்றைக் கட்டுவதற்கு முன்வந்த தனவந்தர் அல்ஹாஜ் ஏ.ஐ.எம் அஸ்கருக்கு நன்றி பாராட்டும் முகமாக, நூற்றாண்டு அபிவிருத்திக் குழு தலைவர் அல்ஹாஜ் ஏ.ஆர்.எம் லாபிர் பொன்னாடை போற்றி கௌரவித்தார்.

அத்துடன் நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக வருகை தந்திருந்த அலி சப்ரிக்கு நன்றியைத் தெரிவிக்கும் வகையில், சிறப்பு நினைவு சின்னமொன்று நீதிபதி எம்.ரி.எம் லபரால் பாடசாலை சார்பாக வழங்கி வைக்கப்பட்டது.



# நாளை நூல்வெளியீடு

வா. கிருஸ்ணா



கவிஞரும் பாடலாசிரியருமான வியன்சீர் எழுதிய 'அந்தரக்கிளைகள்' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு, நாளை ஞாயிற்றுக்கிழமை (30) மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தில், கிழக்கு பல்கலைக்கழகத்தின் மேனாள் மொழித்துறை தலைவர் பேராசிரியர் செ.யோகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதிக்கல்வி பணிப்பாளருமான ஞானமுத்து சிறிநேசனும் சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட கலாசார இணைப்பாளர் த.மலர்ச்செல்வன், மட்டக்களப்பு தேசிய கல்விக்கல்லூரி விரிவுரை இணைப்பாளர் திருமதி த.சுந்தரராஜன் உட்பட பலர் கலந்துகொள்கின்றனர்.

நூல்வெளியீட்டு நிகழ்வில் முதல் பிரதியை தேசபந்து மு.செல்வராஜாவும் சிறப்பு பிரதியை சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தியும் பெற்றுக்கொள்கிறார்கள். நூல் ஆசிரியர் அறிமுகவுரையை கவிஞர் அரசையூர் பகிரதனும் நூல் நயவுரையை கவிஞர் மேராவும் ஏற்புரையை நூலாசிரியர் வியன்சீர் ஆகியோர் நிகழ்த்த உள்ளனர்.





# 'இசை சங்கமம்' பாடல் வெளியீடு

'நாடி' பெருமையுடன் வழங்கிய இசை சங்கமம் பாடல் வெளியீட்டு விழா, கொழும்பு சிட்டி சென்டரில் உள்ள *Scope Cinemas* திரையரங்கில் வெள்ளிக்கிழமை (21) மாலை நடைபெற்றது.

தெரண தொலைக்காட்சி, உருவாக்கியுள்ள பாடல்களுக்கு நிமேஸ் குலசிங்க, சத்துரங்கன டி சில்வா ஆகியோர் இசை வழங்க, தமிழ் திரைப்பட பாடலாசிரியரும் கவிஞருமான பொத்துவில் அஸ்மின் பாடல் வரிகளை எழுதியுள்ளார். பாடல்களை கோகுலன் சாந்தன் (யாழ்ப்பாணம்), சுதர்சினி கோணேஸ்வரன் (திருகோணமலை), குகனேஸ்வரன் (பதுளை), சாதீர் அஹமட் (கொழும்பு), ரவி ரொயிஸ்ட்டர் (மாத்தறை) ஆகியோர் பாடியுள்ளனர்.


















# பொன் விழா

கொழும்பு, வெள்ளவத்தை லயன்ஸ் கழகத்தின் 50ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு, வெள்ளவத்தை லயன்ஸ் கழக அங்கத்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வு, கொழும்பு, 'கார்டன் ஆர்க்' விடுதியில் நடத்தப்பட்டது. கொழும்பு லயன்ஸ் கழக 306 A1 மாவட்ட ஆளுநர் உமா சங்கர், கொழும்பு, வெள்ளவத்தை லயன்ஸ் கழகத்தின் தலைவர் ஈஸ்வரன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் நிழல்களைக் காணலாம்.

(புகைப்படம்: ராஜரத்தினம் சுரேஷ்குமார்)











# கௌரவம்

கலைஸ்ரீ கலைமன்றத்தின் ஏற்பாட்டில் கவியும் கலையும் இணைந்து வழங்கிய 'பாடுவோர் பாடலாம்' புதிய பாடகர்களுக்கான இசைமேடை நிகழ்ச்சி, ஞாயிற்றுக்கிழமை (23) மாலை, கொழும்பு புதிய நகர மண்டபம், 86, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-07 இல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடுவோர் பாடலாம் போட்டியில் பங்குபற்றி, வெற்றி பெற்ற மூவருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட பலர் கௌரவிக்கப்பட்டனர்.













# 'கற்க கசடற..' நாவல் வெளியீடு

புதன்கிழமை (19) சுளிபுரம் 'சத்தியமனை' கே.ஏ.சுப்பிரமணியம் நினைவு நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வள்ளியம்மை சுப்பிரமணியத்தின் 'கற்க கசடற..' நாவல் வெளியீட்டு நிகழ்வின் காட்சிகள் சில...


சபா தனுசன்






















விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 29 ஜனவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.